# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௮ | மலர் |
|---|---|---|
| ௩௩ | ஏவிளம்பி, மார்கழி<br>1957 டிசம்பர், 1958 சனவரி. | ௯ |


## பாணர்கள் பயிற்றுவித்த இசைமுறை.

(குடந்தை, சங்கீதம், ப. சுந்தரேசன்.)

இந்திய நாட்டில் இற்றைக்குச் சிறப்பாகப் பேணி வளர்க்கப் பெறும் கலைகளில் இசைக்கலையும் ஒன்றாகும். இக்கலை வடஇந்திய நாட்டில் ஒருவகையாகவும் தென்னிந்திய நாடுகளில் ஒருவகை யாகவும் வழங்கி வருகின்றது. ஆயினும் அடிப்படையில் ஓர் பெரிய ஒற்றுமை இருப்பதும் இசை வல்லார்களால் ஒருங்கு உணரப் பெறுகின்றது.

நம் தென்னிந்திய சங்கீதத்திற்கு அடிப்படையான தோற்றம் மிகமிகத் தொன்மையானதாகும். நன்கு நுணுகியாராயுமிடத்து பண்டைய தமிழ்நாட்டில், பாணர்பெருமக்களால் வளர்த்துவரப் பெற்ற இசைத்தமிழே இற்றைய தென்னிந்திய சங்கீதத்திற்குத் தோற்றுவாயாகும் என்பதை மிகத்தெளிவாகக் காணலாம்.

சென்ற காலத்துச் சங்கீத பரம்பரையின் வழியே தற்காலச் சங்கீத பரம்பரை அவ்வந்நாட்டில் நன்கு வளர்ந்து வருவது யாவரும் அறிந்ததாகும். இக்காலத்தில் நம் தென்னிந்திய நாடு களில் மிகப்பழைய வழியில், எல்லா வகைகளிலும் உயர்தரமான பல பண்பாடுகள் பொருந்திய மிகச்சீரிய முறை சிறிதும் மங்காதவாறு பழைய குருகுல ஒழுங்கிற் பயிலப்பெற்றும் பயிற்று விக்கப் பெற்றும், நல்லதொரு ஆசிரிய மாணவ பரம்பரையின்மூலம், இயல்பாகவே விருப்பம் உடையோர் யாவரானும் நன்கு பாதுகாக்கப் பெற்றுவரும் ஒப்பற்ற இசைக் கலையே கர்நாடக சங்கீதம் எனப்படுகின்றது. இக்கலையின் பயிற்சி முறைகள் யாவும் பழைமையை ஒட்டியே தொடங்கப் பெறுவன. நம் தென்னிந்திய சங்கீதமாகிய கர்நாடக சங்கீதம், அதன் சிறந்த அடிப்படையான அமைப்புமுறைகளோடு நல்ல வழிகளிற் பயிற்சி பெற்ற இசையாளர்களாலேயே தென்னாட் டின் மொழியமைப்பினையும் அதன் நடையின் செலவினையும் ஒட்டிப் பயிலப்பெற்றது; பயிற்றுவிக்கவும் பெறுகின்றது. உலகத்தில் உள்ள எல்லா நாட்டினர்களும் இந்தியாவில் சிறப்பாகத் தென் னிந்திய சங்கீதத்தின் தனித்த நீர்மையினைப் பாராட்டுகின்றனர்.

மேலும் இன்றைய தென்னிந்திய இசைக்கலையின் தோற்றுவாய் மிகப்பழைய தண்டமிழ் நாட்டு இசைத்தமிழ் ஆனமையினாலே அத்தகைப் பழைமையான தன்மையின் பெருவிளக்கமாகப் பற்பல சூழ்நிலைகளில் பல்வேறு காலங்களில் எவ்வெவ்வாறோ வளர்ச்சி யுற்று இந்நாளிலும் தனக்கென ஒரு போக்குமுறை கொண்டு விளங்குவதால் இந்நாளிலும் தென்னிந்திய இசைக்கலை இந்தியாவி லேயே மிகத்தொன்மையான கலைகளில் ஒன்றாகக் கருதப்படு கின்றது. இக்காலத்தில் அறிஞர்கள் பலர், தென்னாட்டின் இசைக் கலையை இனித் தென்னிந்திய சங்கீதம் எனவே கூறவேண்டும் எனக் கருதுகின்றனர். இக்கருத்தும் நாட்டில் வரவேற்கப்படத்தக்கதே யாகும்.

நம்மால் பயிலப்பெற்றதும் பயிற்றுவிக்கப்பெறுவதுமான இசை முறையை நன்கு அறிந்துகொண்டால் பழந்தமிழ்நாட்டுப் பாணர்கள் பயிற்றுவித்த இசைமுறையை நன்கு அறிந்துகொள்ளக்கூடும். பழந் தமிழ் நாட்டில் இசைக் கலையைப் பயின்று வந்தவர்கள் பாணர் களேயாவர். அவர்கள் பெரும்பாணர்கள் எனவும் சிறுபாணர்கள் எனவும் நூல்களில் கூறப்படுகின்றனர். அப்பாணர்களின் கையி லிருந்த இசைக் கருவிகள் யாழ்க் கருவிகளேயாம். யாழ்க் கருவியில் ஒவ்வொரு இசைக்கும் ஒவ்வொரு நரம்பே கட்டப்படும். பல்வேறு வகையான யாழ்க் கருவிகள் இருந்து வந்தனவெனினும் அவற்றுள் சிறப்பானவை நான்கேயாம். அவை பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் என்பனவாம். இவையாவும் உரையாசிரி யர்களால் நன்கு விளக்கப்பெறுகின்றன.

இவையன்றிக் குறிஞ்சியாழ், முல்லையாழ், மருதயாழ், நெய்தலி யாழ், பாலையாழ் என்பனவும் இருந்தனவென்று தெரிகிறது. அந் தந்தக் கருவிகளில் முதற்றொகுதியாகக் கட்டப்பெற்ற நரம்பின் நிரல் களின் வழியே தோன்றும் முதற் பண்ணை அந்தந்தக் கருவியின் பெயராலேயே குறிப்பிடுவதுமுண்டு. ஆகவே, பாணர்களும் அவர் களால் இசைக்கப்பெற்ற கருவிகளும் நிரம்ப இருந்தமையால் இன்றியமையாது அவற்றின் பயிற்சி முறைகள் நல்ல திட்டவட்ட மான அமைப்போடுகூடி இருந்திருக்கத்தான் வேண்டும்.

எப்பயிற்சியையும் தொடங்குவதற்கு ஒரு வரன்முறை உண்டு. அவ்வரன் முறையும் ஏதேனும் ஓரியற்கைபற்றியே அமைக்கப் பெறுவதுண்டு. தற்காலப் பயிற்சி முறையமைப்பினை முதன்மை யாகக் கூறிப் பிறகு பாணர்கள் பயிற்றுவித்த முறையைக் கூறுவேன். அவ்வாறு கூறினாற்றான் அக்கலையின் பயிற்சிமுறை நன்கு விளங்கும்.

தற்காலம் நமது நாட்டில் இசைபயிலும் இளஞ் சிறார்களுக்கு முதன் முதலில் பயிற்சி தொடங்குங்கால் சரி கம பத நிச எனும் ஏழெழுத்துக்களால் எடுத்தலாகவும் படுத்தலாகவும், அதாவது ஆரோசையாகவும அமரோசையாகவும், தற்காலத்திய எழுபத்தி ரண்டு பெரும் பண்களில் பதினைந்தாவதாகிய மாயா மாளவ

**கௌளை** எனும் பெரும் பண்ணில் பயிற்றுவிப்பது வழக்கம். இக் கருத்தினை இக்காலத்திய இசையாளர்கள் யாவரும் ஒருங்கறிவர். அவ்வாறு முதன் முதலாகப் பயிலும் அப்பண்ணின் இலக்கணத் தையும் இங்கே கூறவேண்டும்.

இப்பண்ணின் இலக்கணம் வருமாறு :—

எழுபத்திரண்டு பெரும் பண்களை இரு கூருகப் பாகுபடுத்தி யறிய, குரல் என்ற மத்தியமம் எனும் இசையில் சுத்த மத்திமம் வருகின்ற பண்களாக முப்பத்தாறும் பிரதி மத்தியமம் வருகின்ற பண்களாக முப்பத்தாறும் ஆக எழுபத்திரண்டும் ஒரு தொகுதியாக நிற்கின்றன.

இவையாவற்றையும் வகைப்படுத்தி வடநூற் கணித முறையை யொட்டி எண் வகைகளை **கடபயாதி சங்க்யை** முறையாக நிறு வியவர் நம் நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கோவிந்தாச்சாரியார் என்ற பெரியவராவர். ஆனால் இப்பெரும் பண்களை, தொகை வரையறைப்படுத்தி முதன் முதலாகக் கண்ட பெரியவர் வேங்கடமகியார் ஆவர். இவர் நம் தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் காலத்தவர். இவருடைய தந்தையார், கோவிந்த தீட்சிதர் எனப்படுவார். இவர்கள் யாவரும் நம் தஞ்சையிலேயே அக்காலத்தில் அரசர்களிடத்தில் அமைச்சர்களாகவும் பெருமதிப்பு உடையவர்களாகவும் அத்துடன் இசைக்கலையில் மிகத் தேர்ச்சியுற்ற வர்களாகவும் நன்கு விளங்கி வந்தனர். இவர்கள் காலம் பதினாறு-பதினேழாம் நூற்றாண்டாகும். நாம் பயின்றும் பயிற்றுவிக்கப்பெறு வதுமான **மாயா மாளவ கௌளை** என்ற பெரும்பண் வேங்கட மகியார் என்பாரால் **கௌளை** மேளம் என்றே குறிக்கப்பட்டுள்ளது. நூருண்டுகளுக்குப் பின்னரே **கௌளை** என்ற ஒரு பெரும்பண் **மாயா மாளவ கௌளை** என நீண்டதொரு பெயரினைப் பெற்று விட்டது. இப்பண்ணின் அலகுகள் வருமாறு :—

(வேங்கடமகியின் சதுர்தண்டிப் பிரகாசிகையெனும் நூலின் மொழிபெயர்ப்பு)

"ஷட்ஜமும் சுத்த ருஷபமும் அந்தரகாந்தாரமும் சுத்த மத்யம பஞ்சம தைவதங்களும் காகலி நிஷாதமும் ஆகிய இந்த இசைகளினின்று தோன்றியது கௌளை மேளமெனப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| "ஷட்ஜத்தின்கண் ஒன்றும் | ச | ం | தொடக்க இசை |
| ருஷபத்தின்கண் மூன்றும் | ரி | ங | சுத்தருஷபம் |
| காந்தாரத்தின்கண் ஐந்தும் | க | ரு | அந்தரகாந்தாரம் |
| மத்யமத்தின்கண் ஒன்றும் | ம | க | சுத்தமத்யமம் |
| பஞ்சமத்தின்கண் நான்கும் | ப | ச | பஞ்சமம் |
| தைவதத்தின்கண் மூன்றும் | த | ங | சுத்ததைவதம் |
| நிஷாதத்தின்கண் ஐந்தும் | நி | ரு | காகலிநிஷாதம் |

என்றிப்படி இதன் அலகுகள் இருபத்திரண்டும் தெளிவாக அறியக் கிடப்பன. மேலைப்பிரிவுகளில் இது பதினைந்தாவது பிரிவு என்பதாம். இது கௌள மேளமாம்."

மேற்கூறிய இலக்கணமுறையே தற்காலமும் நம்மிடையே இருந்து வருகின்றது. வேங்கடமகியாருக்குக் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் கன்னட நாட்டில் வாழ்ந்த புரந்தரதாசர் என்ற பெரியவரே இக்கௌள மேளத்தில் இக்காலமும் நாம் கைக் கொண்டுவரும் சுராவளி, அலங்காரங்கள், கீதங்கள் போன்ற பயிற்சி முறையை முதன்முதலாக ஏற்படுத்தியவர் என்பது இசை யாளர்களின் கருத்து.

இக்கருத்துப்பற்றியே, பயிற்சி முறைகளை எளிய வகையில் ஆக்கிய காரணம்பற்றி புரந்தரதாசர் அவர்களை கர்நாடக இசை முறைக்கு ஆதிகுரு என்றும் பிதாமகர் என்றும் கூறும் வழக்கெல் லாம் மிகப் பிற்காலத்தில் தோன்றலாயின.

ஆகவே இக்காலத்திய மாயாமாளவ கௌள என்ற பெரும்பண் நமது வேங்கடமகியார் காலத்தில் கௌள மேளம் எனப்பட்டதால் புரந்தரர் காலத்திலும் கௌள என்றுதானிருந்திருக்கவேண்டும் என்பது நன்கு விளங்கும். வேங்கடமகியாருக்கு ஒரு நூற்றாண்டு போன்று முற்பட்டவர் புரந்தரதாசர் என்றாலும், இசைப்பயிற்சிமுறை, புரந்தரர் காலத்திலும் அக்காலத்திற்கேற்பப் புதுமையும் எளிமையும் கருதி ஆக்கப்பெற்றிருக்கக்கூடும். அத்தகைய புரந்தரதாசர் காலத் திற்கு முற்பட்ட காலத்தில் இசைப்பயிற்சியே இல்லையென்று கூறு தல் கூடுமோ? பழைய பயிற்சி முறையையே புதுமையாகப் பழைய வேறொரு பண்ணிலே புரந்தரதாசர் அமைத்துவிட்டார் போலும். மேற்கூறிய வழக்கு முறைகள் யாவுமே கி. பி. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து தமிழ் நாட்டிற் பரவியவாகும். பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே பயிற்சி வகைகள், தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்த மக்களிடையே மிகப்பழைய முறையையொட்டியேதான் இருந்து வந்தன.

இதற்குச் சான்று, ஆனாயர் வரலாற்றில் தெய்வச் சேக்கிழார் கூறிய ஒரு பாடலாகும். அப்பாடல் வருமாறு:

"மாறுமுதற் பண்ணின்பின் வளர்முல்லைப் பண்ணாக்கி
ஏறியதா ரமுமுழையும் கிழைகொள விடுந்தானம்
ஆறுலவுஞ் சடைமுடியார் அஞ்செழுத்தி னிசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாங் கோடிப்பாலையினிறுத்தி".

சேக்கிழார் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டென்பர். அது எவ் வாறாயினும் தமிழ் நாட்டின் இசையாளர்கள் பயிற்சி முறைக்கு அடிப்படையான கோடிப்பாலை என்ற பெரும்பண்ணை, கூறிய பட்டடைக் குரலாங் கோடிப்பாலை யினிறுத்தி எனக் கூறிய பெருமை சேக்கிழாருக்கேயுரியது.

இப்பாடலொன்றே பண்டைய இசைத்தமிழ்ப் பயிற்சி முறையை மிகத் தெளிவாக அறியும் பொருட்டுக் கூறப்பெற்றதாகும். இப் பாடலில் உள்ள சொற்களில் பட்டடைக் குரலாங் கோடிப் பாலையில் நிறுத்தி என்ற சொற்கள், பயிற்சி முறையில் அக்கால வழக்கினையே காட்டுகின்றன. இச் சொற்களுக்குப் பொருள் காண வேண்டுமானால் தண்டமிழ்க் கடலிலே விபுலானந்த அறிவு எனும் தோணியைப் பற்றிச் சிலப்பதிகார உரையாசிரியர்கள் எனும் தீவுகளில் ஏறி உலாவியும் உழன்றும் வரவேண்டும். நம் சேக்கிழாரோ ஆனயர் குழலூதிய நீர்மையினைக் கூறுவதால் நாமும் சிலப்பதிகாரத்தில் குழலோன் அமைதியையே காண்போம். சிலப்பதிகாரச் செல்வத் திற்கு உரைதந்த பெரியவர்களில் ஒருவரான அரும்பதவுரைகாரர் என்பார், வண்ணப்பட்டடை யாழ்மேல் வைத்து எனும் பகுதியில்,

"பட்டடை என்பது நரம்புகளில் இளிக்குப் பெயர். என்னை? எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாதலின், வண்ணம் என்பது நிறம். நிறத்தினையுடைய பட்டடை என்றவாறு" எனக் குறித்தார். இதே பகுதிக்கு அடியார்க்கு நல்லாரென்பாரும், "பட்டடை — நரம்புகளில் இளிக்குப் பெயர். என்னை? எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாதலின், வண்ணம்—நிறம்" எனக் கூறினர்.

மேலும் இரண்டு உரைகாரர்களும் "இதனை யாழ்மேல் வைத் தென்க" என இளி நரம்பைக் கூறியதால் பண்டைய இசைத்தமிழின் பயிற்சிமுறை இங்கே நன்கு விளக்கப்பெறுகின்றது. சிலப்பதி காரத்தில் "வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்து" எனும் சொற்கள், இளங்கோவடிகளால் குழலோனமைதியிலேயே கூறப் பட்டுள்ளன; யாழாசாரியனமைதியிலன்று; ஆயினும் யாழ்மேல் வைத்து எனக் குழலோனமைதியில் கூறிய நுட்பம், பண்டைய இசைத்தமிழின் பயிற்சிமுறை கூறும் நுட்பமேயாகும். அஃதாவது, யாழ்க் கருவியில் இசைக் கலையை முறையே பயிற்சி செய்கின்ற வகை குறித்து அவ்வாறு கூறுவதாயிற்று.

இளங்கோவடிகளால் கூறப்பட்ட இதே பகுதியை எத்துணையோ நூற்றுண்டிற்குப் பின்னரிருந்து விளங்கிய சேக்கிழார் பெருமான், ஒரு சிறந்த குழலாசிரியரைக் கூறுமிடத்தே, பண்டைய மரபும் இசைக் கணித இசையிலக்கண முறையும் சிறிதேனும் வழுவுறாமல் "பட்டடைக் குரலாங் கோடிப்பாலை" என மிக விளக்கமாகக் கூறி வைத்திருப்பது எத்துணைச் சிறப்புடையதாக இருக்கின்றது! இவை யாவும் முறையே இசையைத் தெளிவாகப் பயின்று தமிழ் நூல் களையும் அறிந்துணர்ந்தார்க்கன்றி எவ்வாறு விளங்கும்?

பட்டடை என்ற இசை இளி என்பதை உரையாசிரியர்களின் வாயிலாக அறிந்தோமல்லவா? அதுபற்றியும் சிறிது சிந்திக்க வேண்டும். இதற்குத் தெளிவான விளக்கம் எழுதி என்போன்ற இசை பயின்றுரை உணரச்செய்த பெருமையும் அறிவுடைமையும் அருட்டிரு விபுலானந்த அடிகளாரையே சார்ந்தனவாகும். (தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

ஓர் மதிப்புரை.

# *கங்காதேவி எழுதிய மதுரா விஜயம்.

[ நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர். ]

இனி, குமாரகம்பண்ணன் வென்றிகொண்ட மதுரைச் சுலுத்தான்களைப்பற்றித் தெரிந்துகொள்ளுவதற்குமுன், தமிழகத்தில், அக்காலத்திலும், அதற்குமுன்பும், மகமதியர்கள் நிலை எவ்வாறு இருந்தது என்பதை ஒரு சிறிது தெரிந்துகொள்ளுவோம். மகமதியர்கள், தமிழ் நாட்டிற்குப் புதியவர்கள் அல்லர்; அராபியர்களும் அவர்களுக்கு அருகில் வாழ்ந்தவர்களும், இஸ்லாமிய சமயத்தைத் தழுவி மகமதியர்கள் ஆவதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே, வாணிகத் துறையில் தமிழ் மக்களோடு தொடர்புகொண்டிருந்திருக்கிருர்கள். வடநாட்டிலிருந்து மகமதியர்கள் தமிழ் நாட்டைப் படையெடுத்துத் தாக்குவதற்குச் சில நூற்றுண்டுகளுக்கு முன்னரே, தமிழகத்தின் கடற்கரையோரங்களிலும், உள் நாடுகளிலும், வாணிகத்தின் பொருட்டுப் பல மகமதியர்கள் குடியேறி, சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து வந்திருக்கிருர்கள். தமிழ் நாட்டு மன்னர்கள், இவர்களுக்கு எல்லாவிதமான உரிமையும் கொடுத்து ஆதரித்து, இவர்களுடைய வாணிகத்தையும் வாழ்க்கையையும் வளம்பெறச் செய்திருக்கிருர்கள். இவர்கள்கடற்கரைப் பட்டினங்களாகிய காயற்பட்டினம், மல்லிப்பட்டினம், நாகைப்பட்டினம் முதலிய இடங்களில் மிகுதியாகத் தங்கியிருந்திருக்கிருர்கள்; உள்நாட்டு மக்களோடு நட்புகொண்டு அமைதியாகவே வாழ்ந்திருக்கின்ருர்கள்; என்று நாம் எண்ணவேண்டியிருக்கிறது. இக்கூட்டத்தாருக்கு 'அஞ்சு வண்ணத்தார்' என்ற பெயர் வழங்கியிருந்திருக்கின்றது. கி. பி. 1269ல் (இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை வட்டத்தில் தித்தாண்டதானபுரத்தில்) பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று—

'இவ்வூரில் இருக்கிற அஞ்சுவண்ணமும் மணிக்கிராமத்தோடும் ஆரியரில் சாமந்த பண்டசாலையும்......பட்டாரியரும் தோயாவத்திரச் செட்டிகளும் தென்னிலங்கை வளஞ்சியரும் கைக்கோளரும் தூசுவரும் வாணியரும் நீண்ட கரையாருங்கூடி......கோயில் திருமுன்பிலே நிறைஉறக் கூடியிருந்து' எனக் கூறுவதுகொண்டு இவர்கள் எவ்வாறு நாட்டோடு உறவுகொண்டிருந்தார்கள் என்பது ஒருவாறு தெரியலாகும். தஞ்சை 'சரஸ்வதிமால்' பழஞ்சுவடி நிலையத்திலுள்ள 'தனிப்பாடற்றிரட்டு ஒன்றில் காணப்பெறும் ஒரு பாட்டு, நாகையில் வாழ்ந்துவந்த மகமதியர் கூட்டத்தைப் புகழ்ந்து

* மதுராவிஜயம் — வடமொழிநூல் — கங்காதேவி இயற்றியது. ஆங்கில மொழிபெயர்ப்பு. பதிப்பாசிரியர் திரு. S. திருவேங்கடாச்சாரியர் — அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடு.

'குடக்கினில் துரங்கமும், வடக்கினில் கலிங்கமும்,
குணக்கினில் பசும்பொனும், குளித்த தெற்கில் ஆரமும்,
அடிப் பரப்புடைக் கலத்து, அனேக வண்ணமாக வந்து,
அஞ்சுவண்ணமும் தழைத்து, அறத்தின் வண்ணமான ஊர்
கடற்கரை குவிடுத்திடு சந்தனத்தை இந்துடன்
கலந்து, இறைக்கும் மந்தியை, கனன்று, முசுவின் குலம்,
புடைப்பதற்கு எழுந்து, கைமுறுக்கலும், உக்கி, வாய்
புக்க முத்தை விட்டு—எறிந்து, பூகம் ஏறும் நாகையே.

எனப் பாராட்டுகின்றது; இவை இரண்டானும் இந்த மகமதியர் கூட்டத்தின் வாணிகச் சிறப்பும் ஊராருடன் ஒத்து வாழ்ந்தமையும் தெரிவதோடு, புலவர்களால் பாராட்டத்தக்க முறையிலும் நடந்து கொண்டிருக்கிருர்கள் என்பதும் எண்ணக்கூடியதாக இருக்கிறது; இவர்களேப்பற்றிய கல்வெட்டுக்களும், பட்டயங்களும், பல காணப் பெறுகின்றன; பல பழம் பாடல்களும், தேடிப் பார்த்தால் கிடைக் கவுங்கூடும். பல்சந்தமாலே என்ற (தொகுப்பு) நூல் ஒன்று களவியற் காரிகை உரையில் மேற்கோளாக எடுத்தாளப்பெறுகிறது. அந்நூலில் வரும் கீழே குறிப்பிட்டுள்ள செய்யுள்கள், இந்த மகமதியர் கூட்டத்தைப்பற்றிய சில செய்திகளே நமக்குத் தெரிவிக்கின்றன :—

'கலேமதி வாய்மைக் கலுழ்பா வழிவருங் கற்பமைந்த
தலேமைய ரேழ்பெருந் தேரங்க மும்பெற்ற நந்தசச
மலேயன மாமதில் வச்சிர நாடன்ன வாணுதல்தன்
முலேயிணே தோய்ந்ததெல் லாங்கன வேயென்று முன்னுவனே.

'இயவன ராசன் கலுபதி தாமுத லெண்ணவந்தோர்
அயன்மிகு தானேய ரஞ்சுவண் ணத்தவ ரஞ்சலென்னுக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினேப்புனங் காய்கொய்துபோம்
பயன்விளே வாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே. [2]

'பிறையார் நறுநுதற் பேதைதன் காரணத் தாற்பெரும
மறைநா ளிரவில் வருவது நீயொழி வச்சிரநாட்
டிறையா கியகலு பாமுத லானவர் யானேகணின்
றறைவாரும் விஞ்சத் தடவிகள் சூழு மணிவரையே. [3]

'வானது நாணக் கொடையா லுலகை வளர்த்தருளும்
சோனகர் வாழுஞ் செழும்பொழில் சூழ்ந்து(ள) பாரணேயாள்
தானணி வாணுதல் கண்டும் பகலே தனித்தனியே
மானமி லாதிரை தேரும் பறவைக டா(ழ)ம(ழ) (க)ழிந்தே' [4]

'வில்லார் நுதலியு நீயுமின் றேசென்று மேவுதிர்சூ
தெல்லா முணர்ந்தவ ரேழ்பெருந்தே ரங்கத் தியவனர்கள்
அல்லா எனவந்து சத்தியு (நந)தாரவகை தொழுஞ்சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே' [5]

[தொடரும்]

# குற்றமும், தண்டனையும்.

(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

சாமி. சிதம்பரனார்.

## குற்றங்கள் குறையும் வழி.

குற்றங்கள் குறைய வேண்டுமானல் கொடிய தண்டனைகள் கொடுத்தாகவேண்டும்; குற்றம் புரிந்தோரைத் தண்டிப்பதிலே தவறில்லை. குற்றம் புரிகின்றவர் சிலர்; குற்றம் புரியாதவர்கள் பலர். சிலர் செய்யும் பிழைகளால்—குற்றங்களால்—கொடுமைகளால்—பலர் தீமையடைகின்றனர். பலர் நன்மைக்காகச் சிலரைத் துன்புறுத்துவது—தண்டிப்பது—இவைகளின் வாயிலாக அவர்களை நல்லவர்களாக்குவது—அறமாகும்; நீதியும் நேர்மையுமாகும்; இதுவே பண்டும் இன்றும் உள்ள அரசியல் அறம்.

அரசாங்கத்தின் கடமை மக்கள் எல்லோரையும் மகிழ்ச்சியுடன் வாழ வைப்பதாகும். பெரும்பாலான மக்களின் வாழ்வுக்கு ஒரு சிலர் தந்நலநோக்குடன் ஊறுவிளைப்பார்களானல் அவர்களை விட்டு வைப்பது தவறு; செங்கோல் முறையாகாது. சமுதாயத்திற்கு இடையூறு செய்வோர், அமைதியான வாழ்க்கையின் அடிப்படையைத் தகர்ப்போர் ஆவார்கள்; அவர்களை அடக்குவது அறமுறையேதான்.

இந்த உண்மையை நமது முன்னோர்கள் உணர்ந்திருந்தனர். ஆதலால் அவர்கள் குற்றம் புரிந்தோர்க்குக் கடுந்தண்டனைகள் கொடுத்து வந்தனர்.

பண்டைக்காலத்து அறநூல்களிலே இன்னின்ன குற்றங்களுக்கு இன்னின்ன தண்டனைகள் கொடுக்கவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளன. இக்காலத்தினர் சிலர் அந்த அறமுறைகளைப்பார்த்து எள்ளி நகையாடுகின்றனர். அவைகள் 'நாகரிகமற்ற காலத்தில் ஏற்பட்டவை; இக்காலத்திற்கு ஏலாதவை; கருணையற்ற கடுந்தண்டனை முறை, மிருகத்தனமானது, மனிதத் தன்மைக்கு மாறுனது' என்று கூறுகின்றனர்.

"குற்றம் புரிந்தால் தப்பித்துக்கொள்ள முடியாது; கடுந்தண்டனைக்கு ஆளாகியே தீரவேண்டும்; மக்கள் சமுதாயத்திற்குத் தீங்கிழைத்தால் மாறுகால், மாறுகை வாங்கப்படும்; உயிருக்கு ஆபத்துண்டாகும் அல்லது நமது செல்வம் பறிபோகும், அல்லது நாம் இந்த நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவோம்" என்ற அச்சம் மனித சமுதாயத்தில் நிலவவேண்டும்.

அப்பொழுதுதான் குற்றம் புரிய நினைப்போர் தவறு செய்யத் துணியமாட்டார்கள். குற்றங்களுக்கேற்பக் கடுமையான தண்டனைகள் கொடுப்பதன் வாயிலாகத்தான் குற்றவாளிகளின் எண்ணிக்கையைக் குறைக்கமுடியும். இந்த உண்மையை உள்ளத்திற்கொண்டுதான் முன்னோர் சிறு குற்றங்களுக்குக்கூடப் பெருந் தண்டனை கொடுத்து வந்தனர்.

பண்டைத் தமிழக வேந்தர்கள்—ஆட்சியாளர்கள்—மக்கள் நலனையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். ஆதலால் அவர்கள் தவறு செய்வோர்க்குக் கடுமையான தண்டனைகளைத் தரப் பின் வாங்கவில்லை; இவ்வாறு செய்வதுதான் அரசநீதி—செங்கோல் முறை—நாட்டு மக்கள் நல்வாழ்வு பெறச்செய்யும் அறநெறி என்பதை மறவாதிருந்தனர். அறவோர்களும் இத்தகைய அரசுக்குத் துணை செய்தனர்.

ஒரு பசுங்கன்றைக் கொன்றதற்காகத் தன்மகன் உயிரையே வாங்கினான் ஒரு தமிழ் மன்னன். இரவிலே அந்தணர்கள் வீட்டுக் கதவுகளைக் கையால் தட்டிய பாண்டிய மன்னவன் ஒருவன் அக்குற்றத்திற்காகத் தன் கையையே துண்டித்துக் கொண்டான். இவைகள் கடுந்தண்டனைக்குக் காட்டாக வழங்கும் கதைகள்.

### ஒறுக்கும் முறை.

குற்றமற்றவர்களைத் தண்டிப்பதுதான் கொடுங்கோன்மை; குற்றமுள்ளவர்களை ஒறுப்பது ஒழுங்குமுறைதான். குற்றவாளிகள் என்று குற்றம் சாற்றப்பட்டவர்களைப்பற்றி நன்றாக ஆராயவேண்டும். அவர்கள் குற்றவாளிகள்தாம் என்று மெய்ப்பிக்கப்பட்ட பின்னர், அவர் புரிந்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனை வழங்கவேண்டும். இவ்வாறே பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன.

“நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்பநாடி அத்தக ஒறுத்தி”

என்பது புறநானூற்றின் 10-வது பாடலில் ‘நீ மெய்யாக மனத்தான் ஆராய்ந்து அறுதியிடப்பட்ட கொடுமையை ஒருவன்பால் காணின், அதனை நீதி நூற்குத்தக ஆராய்ந்து, அத்தீமைக்குத் தகத் தண்டஞ் செய்வை’ என்பது இவ்வடிகளின் பழைய உரை. சிறிதும் கண்ணோட்டம் செய்யாமல் தீமைக்குத் தகுந்தவாறு ஒறுக்கவேண்டும் என்பதை இப்பாடல் எடுத்துக்காட்டிற்று.

கண்ணோட்டம் இன்றிக் குற்றத்துக்குத் தக்கவாறு தண்டனை தரவேண்டும் என்பதை வள்ளுவரும் வலியுறுத்துகின்றார்.

‘ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை’

என்பது திருக்குறள் : 541.

**‘தன்கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக்குற்றத்தை நாடி, யாவர் மாட்டும் கண்ணோடாது, நடுவுநிலைமையைப் பொருந்தி அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து அவ்வளவிற்றாகச் செய்வதே முறையாம்’** என்பது இத்திருக்குறளுக்குப் பரிமேலழகர் கூறிய உரை.

இங்கே எடுத்துக்காட்டிய புறநானூற்றுப் பாட்டின் பகுதியும், திருக்குறளும், பழந்தமிழர்களின் நீதிமுறையை விளக்கின. ஒருவன் குற்றவாளிதானா என்பதை நன்றாக ஆராய்ந்து தெளிய வேண்டும். அவன் உண்மையான குற்றவாளியானால், அறநூல் விதியின்படி அவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். குற்றவாளி யாராயிருந்தாலும் சரி; நண்பன், உறவினன், அல்லது பகைவன் என்று கருதாமல், குற்றத்திற்குத்தக தண்டிக்க வேண்டும். இதுவே மனித சமுதாயத்தில் குற்றங்கள் வளராமல் தடுக்கும் வழியாகும். இதுவே நீதிமுறையாகும். தண்டனை தருவதிலே சிறிதும் நடுநிலை தவறக்கூடாது என்பதை இப் பாடல்கள் வலியுறுத்துகின்றன.

## கொலைத் தண்டனை.

கொலைத் தண்டனையே கூடாது என்று கூறுவோர் உண்டு. ‘நாகரிகம் பெற்ற மக்கள் சமுதாயத்தில் கொலைத்தண்டனையைப் பின்பற்றுவது அநாகரிகம்; கொலைத்தண்டனை விதிக்கப்பட்டவர், பின்னர், குற்றமற்றவர் என்று மெய்ப்பிக்கப்பட்டால், அவரைத் திருப்பிக்கொண்டுவர முடியாது; ஆதலால் கொலைத் தண்டனை விதிப்பது குற்றம் என்பர். கொலைத் தண்டனை கூடாது என்போர் கூறும் கருத்துக்களில் இதுவே முதன்மையானது.

“கொலையாளிகள் உயிர்வாழ இடங்கொடுத்தால், மேலும் மேலும் கொலைக் குற்றம் பெருகிக்கொண்டே வரும்; கொலையாளிகள் தொகையும் வளர்ந்து வரும்; கொலைக்குற்றத்திற்குக் கொலைத் தண்டனை கொடுத்தால் தான் கொலைக்குற்றங்களைத்

தடுக்கமுடியும்" என்பதே கொலைத் தண்டனை கொடுக்கும் முறையை மாற்றக்கூடாது என்போர் கூறும் கருத்துக்களில் முதன்மையானது.

குற்றம் சுமத்தப்பட்டவன் உண்மையான குற்றவாளியா? அல்லவா? என்பதைக் கண்டுபிடித்தாகவேண்டும். இத்தகைய திறமை படைத்தவர்கள் கையில்தான் அந்த அதிகாரம் ஒப்படைக்கப்படவேண்டும்; நேர்மையும் நுண்ணறிவும் படைத்தவர்கள் அறங்கூறும் அவையங்களிலே அமர்ந்து நீதி வழங்க வேண்டும். இந்த முறை ஒழுங்காகப் பின்பற்றப்பட்டால் குற்றமற்றவர்கள் குற்றவாளிகளாக ஆக்கப்படமாட்டார்கள். ஆதலால் குற்றமற்றவர்கள், குற்றவாளிகளாகக் கருதப்பட்டுத்தண்டனைக்கு ஆளாவார்கள் என்று வைத்துக்கொண்டு, கொலைத் தண்டனையே கூடாது என்பது பொருந்தாது.

கொலைத் தண்டனை இருக்கவேண்டும் என்பதுதான் முன்னோர்கள் கருத்து; அறநெறிக்கு அடங்கி வாழ்ந்த ஆன்றோர்கள் முடிவு. தெய்வத்திற்கும், அநீதிக்கும் அஞ்சி வாழ்ந்த பண்டைய அறிஞர்களின் கருத்து. இன்றைய உலக அறிஞர்களில் பெரும்பாலோர் கொலைத் தண்டனை முறையை ஆதரிப்பவர்கள் என்பதிலே ஐயம் இல்லை.

பழந்தமிழர் அரசியலிலே கொலைத்தண்டனை கையாளப்பட்டு வந்தது. நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக, அரசாங்கங்கள் கடும் குற்றம் புரிந்தோர்க்குக் கொலைத் தண்டனை கொடுக்கப் பின்வாங்கவில்லை. இந்த உண்மையைத் திருவள்ளுவர் தெளிவாக உரைக்கின்றார்.

"கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

என்பது திருக்குறள் : 550.

**"அரசன் கொடியவர்களைக் கொலையான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல் உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனோடு ஒக்கும்"** என்பது பரிமேலழகர் தரும் உரை.

"'கொடியவர்' என்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியில் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறன்இல் விழைவார், என்றிவர் முதலாயினாரை; இவரை வட நூலார் ஆததாயிகள் என்ப. இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லா வழிப் புற் களைக்கு அஞ்சா

நின்ற பைங்கூழ்போன்று நலிவு பல எய்தி உலகு இடர்ப் படுதலின், கோறலும் அரசர்க்குச் சாதி தருமம் என்பதாயிற்று".

இது, 'கொடியார்' என்பதற்குப் பரிமேலழகர் கொடுத்திருக்கும் விளக்கம்.

தீயிட்டு உடைமைகளையும், உயிர்களையும் பாழ் பண்ணுவோர்; நஞ்சிட்டுக் கொலை செய்வோர்; ஆயுதங்களால் கொலை செய்வோர்; திருடுவோர்; வழிப்பறி செய்வோர்; கூட்டமாக வந்து கொள்ளையடிப்போர்; பிறன்மனையாளை விழைவோர்; இவர்களுக்கெல்லாம் கொலைத் தண்டனை விதிக்கவேண்டும் என்பது வள்ளுவர் கருத்தென்று பரிமேலழகர் கூறுகின்றார்.

பண்டைக் காலத்தில், மேற்கண்ட குற்றவாளிகளுக்குக் கொலைத்தண்டனை கொடுக்கும் வழக்கம் இருந்தது. அத்தகைய குற்றவாளிகள் சமுதாயக் கட்டுப்பாட்டையும், வாழ்வையும் நிலைகுலைப்போர் ஆவர்; ஆகையால் அவர்கள் கூட்டம் ஒழிய வேண்டுமானால் கொலைத்தண்டனை கொடுப்பதுதான் செங்கோன்மை என்று கருதினர்.

இன்றைய அறிஞர்கள் சிலர், 'திருவள்ளுவர் கொலைத் தண்டனைக்கு இணங்காதவர்; ஆதலால் இக்குறளுக்குப் பரிமேலழகர் சொல்லும் உரை பொருந்தாது' என்று கூறுகின்றனர். இவர்கள் 'பைங்கூழ் களைகட்டதனொடு நேர்' என்று வள்ளுவர் கொடுத்திருக்கும் உதாரணத்தை மறந்துவிடுகின்றனர். 'கொடியாரைக் கொலையின் ஒறுத்தல்' தான் அறம் என்பதற்கு ஏற்ற உதாரணம் பயிருக்குக் களையெடுத்தல் என்பதாகும்.

பயிர் நன்றாக வளர்ந்து பலன்தர வேண்டுமானால், அதன் இடையிலே முளைத்த களையை அடியோடு பிடுங்கியெறிய வேண்டும். அப்பொழுதுதான் பயிர் வளரும். களையை அடியோடு பிடுங்கி வீசாமல் அதன் தலையை மட்டும் அறுத்துவிடுவார் யாரும் இல்லை. சமுதாயம் நன்றாக வாழவேண்டுமானால் சமூகத் தீங்கிழைப்போரைச் சமுதாயத்து இடையிலே வாழாமல் களைந்தெறியவேண்டும். அவர்களை அழிக்கவேண்டும். அவர்களுக்குக் கொலைத்தண்டனை கொடுப்பதுதான் ஒழுங்குமுறை. இதுவேதான் வள்ளுவர் கருத்து. இக்கருத்தைத்தான் பரிமேலழகர் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

இதனால் கடுங்குற்றவாளிக்குக் கொலைத் தண்டனையளிப்பது தான் செங்கோன்மையாகும் என்பதே பழந்தமிழர் கொள்கையென்பதைக் காணலாம்.

திருட்டுக் குற்றத்துக்குக் கொலைத் தண்டனை தருவது அரசியல் நீதியாகத் தமிழர் கொண்டிருந்தனர். இதற்குச் சிலப்பதிகாரமும் உதாரணமாகும்.

கண்ணகி, பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வழக்காடச் சென்றாள். அவள் தன்னைக் 'கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி' என்று அறிமுகம் செய்துகொண்டாள். அப்பொழுது நெடுஞ்செழியன்,

"கள்வனைக்கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேல் கொற்றம் காண்"

என்று கூறினான். திருட்டுக் குற்றத்துக் கொலைத் தண்டனை கொடுப்பதே அரச நீதி; பழங்காலத்தில் திருடர்களுக்கும் கொலைத் தண்டனை கொடுத்துவந்தனர்—என்ற உண்மையையே இவ்வடிகள் காட்டுகின்றன.

பாண்டியன், கோவலன் குற்றவாளியா என்பதை ஆராய வில்லை; பொற்கொல்லன் பேச்சை நம்பித் தண்டனை கொடுத்து விட்டான். இதுதான் பாண்டியன் செய்த தவறு. திருட்டுக் குற்றத்திற்குக் கொலைத் தண்டனை யளித்தல் அரசநீதி என்பதைச் சிலப்பதிகாரம் ஏற்றுக்கொள்ளுகிறது. திருடர்கள் கூட்டம் வளராதிருக்கவே—அவர்களால் மக்கள் சமுதாயத்திற்கு ஏற்படும் தீமைகளைத் தடுக்கவே—அவர்களுக்கு அரசாங்கம் கொலைத் தண்டனை வழங்கி வந்தது. சிலப்பதிகார காலத்தில் இவ்வழக்கம் நடைமுறையில் இருந்தது.

### கொலைத்தண்டனைக்கு உரியவர்கள்.

'தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியில் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், பிறன்இல் விழைவார், என்று இவர் முதலாயினோர்' கொலைத் தண்டனைக்கு உரியவர்கள் என்று பரிமேலழகர் கூறினார். அவர் காலத்துக்கு முன்னிருந்த இளங்கோவடிகள் கொலைத் தண்டனைக்கு உரியார் இன்னார் என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

"தவம் மறைந்து ஒழுகும்தன்மை யிலாளர்;
அவம் மறைந்து ஒழுகும் அலவல் பெண்டிர்;
அறைபோகு அமைச்சர்; பிறர்மனை நயப்போர்;
பொய்க்கரி யாளர்; புறம் கூற்றாளர்; என்
கைக்கொள் பாசத்துக் கைப்படுவோர்; எனக்
காதம் நான்கும் கடும்குரல் எடுப்பிப்
பூதம் புடைத்து உணும் பூதசதுக்கமும்"

என்பது சிலப்பதிகாரம்; இளங்கோ தரும் நீதி.

'தம்மைப் பிறர் நம்புவதற்குத் தவவேடத்தில் மறைந்து நின்று, அத்தவத்திற்கு மாறுன வழியில் நடக்கும் பொய் வேடத்தார்; தம்மைத் தம் கணவர் நம்பும்படி பொய்யொழுக் கத்தில் மறைந்து நின்று ஒழுகும் வீணன மகளிர்; தம்மை நம்பி, தம் கையில் பொறுப்பை ஒப்படைத்திருக்கும் அரசரைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்யும் அமைச்சர்கள்; தமது மனேவியர் வீட்டிலே தனித்திருக்கவிட்டு, பிறர் மனேயிலே தனித்திருக்கும் பெண்டிரை விரும்பும் தூர்த்தர்கள்; தமது மனமறிந்த உண் மையை மறைத்து நீதிமன்றத்திலேறிப் பொய்க்கரி புகல்வோர்; முன்னே நின்று புகழ்ந்து, பின்னே போய்ப் பழிச்சொற்களேக் கூறும் பழிகாரர்கள்; இவர்கள் எல்லாம் என் கையில் உள்ள பாசத்தில் அகப்படுவோர்; என்று நான்கு திசைகளிலும் நான்கு காத தூரம் கேட்கும்படிக் கடுங்குரல் கொடுக்கும் ஒரு பூதம். மேற்கண்ட குற்றவாளிகளே அப்பூதம் தன் பாசத்தாற் பிணித்து நிலத்திலே மோதி அவர்கள் உயிரை உண்ணும். இத்தகைய பூதம் இருத்தலால் அவ்விடத்திற்கு பூத சதுக்கம் என்று பெயர்.' மேலே காட்டிய சிலப்பதிகார அடிகளில் அமைந்துள்ள பொருள் இதுதான்.

போலித்துறவிகள்; கணவனே வஞ்சிக்கும் பெண்கள்; அரசர்க்குக் கேடு சூழும் அமைச்சர்; பிறர் மனேவியை விரும்பு வோர்; பொய்க்கரி புகல்வோர்; புறம் பேசுவோர்; இவர்கள் எல்லாரும் கொலேத் தண்டனேக்கு உரியவர்கள் என்று இதனுற் காணலாம்.

காவிரிப்பூம்பட்டினத்திலே இத்தகைய குற்றவாளிகளேப் பிடித்துக் கயிற்றிலே கட்டி, நிலத்திலே அடித்து உயிரைப் போக்கும் மன்றம் ஒன்று இருந்ததாம். இதன் பெயர் பூத சதுக்கம் என்பது. அங்கு நிற்கும் பூதமே இக்குற்றவாளிகளே இவ்வாறு செய்யுமாம்.

நான்கு தெருக்கள்கூடும் இடத்திற்குச் சந்தி என்று பெயர். ஊர் நடுவிலே, நாற்சந்தி கூடுமிடத்திலே, குற்றவாளிகளேக் கண்டறிந்து தண்டனே கொடுக்கும் மன்றம் ஒன்று இருந்தது. அந்த மன்றத்தின் தலேவர் குற்றவாளிகளேக் கண்டறிந்து அவர் களேக் கைப்படுப்பதிலே வல்லவர்; அவர் அக்குற்றவாளிகளுக்கு மேற்கூறியவாறு கயிற்றுல் கட்டி நிலத்திலே அறைந்து கொல் லும் கடுந்தண்டனே கொடுத்து வந்தார். அந்த மன்றத்திலிருந்து மேற்கண்ட குற்றங்களுக்குக் கொலேத் தண்டனே கொடுக்கப்படும் என்று உரத்த குரலுடன் அறிவித்துக்கொண்டேயிருப்பார்கள்.

இந்த நீதி மன்றத்தைத்தான் பூதசதுக்கம் என்றும் தண்டனையை நிறைவேற்றும் காவலனைத்தான் பூதம் என்றும் சிலப்பதிகாரம் சித்திரிக்கின்றது. பூதசதுக்கத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளுதல்தான் பொருத்தமாகும்.

மேலே காட்டிய திருக்குறள், சிலப்பதிகாரம் இரண்டினாலும் கொலைத் தண்டனைக்குரியவர்கள் யார் யார் என்பதைக் கண்டோம்.

1. தீயிடுவோர் 2. உணவிலே நஞ்சிடுவோர் 3. கருவியால் கொலைசெய்வோர் 4. கள்வர் 5. வழியிலே செல்வோரைத் துன்புறுத்துவோர் 6. கொள்ளைக்கூட்டத்தார் 7. பொய்த்தவ வேடத்தார் 8. கணவனை வஞ்சிக்கும் பெண்டிர் 9. அரசனுக்குக் கேடு சூழும் அமைச்சர் 10. பிறர் மனை விரும்புவோர் 11. பொய்க்கரி புகல்வோர் 12. புறங்கூறுவோர்.

இந்தப் பன்னிரு குழுவினரும் மனித சமுதாயத்திற்குத் தீங்கு செய்வோர்; சமுதாயக் கட்டுக்கோப்பைச் சீரழிப்போர்; இவர்கள் கூட்டத்தைப் பெருகவிடாமல் தடுத்தால்தான் மக்கள் மன அமைதியுடன் வாழமுடியும். இந்த உண்மையை முன்னோர்கள் உணர்ந்திருந்தனர். ஆதலால்தான் இவர்கள் எல்லாம் கொலைத்தண்டனைக்கு உரியவர்கள் என்று முடிவு செய்யப்பட்டனர்.

பொய்சாட்சி புகல்வோர்க்கும் கொலைத்தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சில வழக்குகளில் குற்றவாளிகள் குற்றமற்றவர்களாக விடுதலை செய்யப்படுகின்றனர். குற்றமற்றவர்கள் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்படுகின்றனர். இதற்குச் சாட்சிகளே முதற் காரணமாவர். குற்றவாளிகளிலே, நீதியை அநீதியாக்கும் பெருங் குற்றவாளிகள் சாட்சிகள்தாம். ஆதலால்தான் பொய்சாட்சி புகன்றோர்க்குக் கொலைத்தண்டனை கொடுத்து வந்தனர் முன்னோர். பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டிருக்கும் கொலைத் தண்டனைக்குரியவர்கள் வரிசையைப் பார்த்தால் நமக்கு வியப்பைத் தருகின்றது. இவர்களிலே பலருக்குக் கொலைத்தண்டனை விதிக்க இக்காலத்தில் சட்டம் இல்லை. குறிப்பாக, கள்வர், வழிப்பறி செய்வோர், பொய்வேடத்தார், கணவனை வஞ்சிக்கும் காரிகையர், பிறர்மனை விரும்புவோர், பொய்க்கரி புகல்வோர், புறம் கூறுவோர் ஆகியோர்க்குக் கொலைத்தண்டனை விதிப்பதில்லை. இதுதான் இக்கால நீதியாக இருக்கின்றது.

இவர்களுக்கெல்லாம் கொலைத்தண்டனை கொடுக்கவேண்டும் என்று சொல்வோரைப் பரிகசிப்போர் சிலர் உண்டு. இன்னும் மக்களாட்சி நடைபெறும் சிலநாடுகளிலே, அரசாங்க அலுவலிலே அமர்ந்துகொண்டு கையுறை (லஞ்சம்) வாங்குவோர்க்குக் கொலைத்தண்டனையுண்டு; அரசாங்கத்தின் பணத்தை வீணாக்கு வோர்க்குக் கொலைத்தண்டனை உண்டு. பலநாடுகளிலே இவர்கள் கொலைத் தண்டனைக்குரிய குற்றவாளிகளாகக் கருதப்படுவ தில்லை.

குற்றங்களுக்குத் தண்டனை கொடுக்கும் பழங்கால நீதி முறைகளைக்கண்டு எள்ளி நகையாடுவதில் பயன் இல்லை; அத்தகைய கொடுந்தண்டனை கொடுத்ததன் கருத்தைத்தான் நாம் காணவேண்டும்.

கடுந்தண்டனையின் வாயிலாகத்தான் குற்றங்களை ஒழிக்க முடியும்; கடுந்தண்டனை உண்டு என்றால்தான் குற்றவாளிகள் குற்றம் புரிய அஞ்சுவார்கள். இக்கருத்துடன் தான் கொலைத் தண்டனை போன்ற தண்டனைகளைக் கொடுத்துவந்தனர்.

குற்றம் புரிந்தோர், தப்பித்துக்கொள்ளுவதற்கு வழியும், வசதியும் இருந்தால் குற்றங்களைத் தடுக்க முடியாது; குற்றவாளி கள் பெருகிக்கொண்டுதான் இருப்பார்கள். குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ளுவதற்கு வழி வகுத்திருக்கும் அரசாங்கம், நாளடைவில், குற்றவாளிகள்—மனித சமுதாயத்தை மதிக்காத வர்கள்—மக்கள் வாழ்வுக்குக் கேடு சூழ்பவர்கள்—ஆகியோரின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டதாகவே ஆகிவிடும். இந்த நிலைமை வலுப்பெற்று வளர்ந்தால், தந்நலத்தையே குறிக்கோளாகக் கொண்ட குற்றவாளிகளே ஆளும் பதவிகளை அடைந்துவிடுவார் கள். இத்தகைய நிலைமை ஏற்படுவதைத் தடுக்கத்தான் சமுதாயப் புல்லுருவிகளுக்குக் கடுந் தண்டனை விதிக்கும் முறையை முன் னோர்கள் அறநெறியாகக் கொண்டனர். இத்தகைய அறநெறி யைத்தான் பண்டைத் தமிழ் மன்னர்களும் பின்பற்றினர்.

குற்றங்களுக்குத் தண்டனையளிப்பதிலே பழந்தமிழ் வேந்தர் கள் கைக்கொண்ட அறநெறி மிகச் சிறந்ததாகும். இதனை ஆராய்ந்துபார்த்தால் இக்கால அரசியல் வல்லுநர்களும் சிந்திக்கத் தக்க சிறந்தவழி புலப்படும் என்பதிலே ஐயம் இல்லை.

[முன் இதழின் தொடர்ச்சி.]

# தஞ்சாவூர் இராசராசேச்சரக் கல்வெட்டு வரலாறு.

**வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார்,**
ஆராய்ச்சியாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

## 2. (a) தளிச்சேரிப் பெண்டுகளுக்கு (Dancing girls) அளித்த நிவந்தங்கள் :—

தளிச்சேரிப் பெண்டுகள் என்பார் தேவதாசிகள் அல்லது தேவரடியார் ஆவர். இவர்கள் * **தளிப் பெண்டுகள்** எனவும் வழங்கப் பெறுவர். இவர்கள் வசிக்கும் தெருக்கள் தளிச்சேரிகள் எனப் பெயர் பெறும். ஓர் பெரிய ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட தளிச்சேரிகள் இருந்தன. "திருவாரூர் **பெரிய தளிச்சேரி** நக்கன் சீருடையாளுக்குப் பங்கு ஒன்று" — என்னும் கல்வெட்டுத் தொடரே இதற்குச் சான்ருகும். திருக்கோயில்களில் ஆடல்பாடல்களின் பொருட்டு இவர்கள் நியமிக்கப்பெற்று வந்தனர். இவர்களில் தலை சிறந்தவர்களுக்கு அரசன் **தலைக்கோல்** என்ற பட்டத்தை அளித்துப் பாராட்டுவது உண்டு. இதைத் திருவையாற்று ஒலோகமா தேவீச்சரத்துக் கல்வெட்டில் காணலாம்.

"பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டினள் ஆதலிற் காவல் வேந்தன்
இலைப்பூங் கோதை யியல்பினின் வழாமைத்
தலைக்கோல் எய்தித் தலையரங் கேறி
விதிமுறை கொள்கையின் ஆயிரத் தெண்கழஞ்சு
ஒருமுறை யாகப் பெற்றனள் அதுவே".

என்னும் சிலப்பதிகாரம், அரங்கேற்று காதைப்பகுதியில் வந்துள்ள 'தலைக்கோல் எய்தி' என்ற தொடர்க்கு அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் "வரிசைக்குத் தக்கபடி **தலைக்கோல் பெயர்** பெற்று" என்று பொருள் எழுதியிருப்பதால் இத்தகைய பட்டம் சிலப்பதிகார காலத்திலேயே வழக்கத்தில் இருந்தமை ஈண்டு அறியத்தக்க தொன்ருகும். நிற்க,

முதலாம் இராசராசன், தஞ்சாவூரில் இராசராசேச்சரத்துக்குத் தெற்கிலும், வடக்கிலும், தளிச்சேரிகளைப் புதியனவாக

* சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், கொலைக்களக்காதை. பக்கம் 418, 430. ஐயர் அவர்களின் நான்காம் பதிப்பில் காண்க.

அமைத்தான். அவைகளுக்குத் தெற்குத் தளிச்சேரி தென்சிறகு, வடசிறகு; வடக்கில் தளிச்சேரி தென்சிறகு; ஷை வடசிறகு; (பெயர் புலப்படாதவாறு கல்வெட்டில் சிதைந்துபோன) மற்றொரு தளிச்சேரி; என்னும் பெயர்களை வைத்தான். தெற்குத் தளிச்சேரி தென்சிறகில் 92 ஷை வடசிறகில் 92; வடக்கில் தளிச்சேரி தென் சிறகில் 95, ஷை வடசிறகில் 96; மற்றொரு தளிச்சேரியில் 25, ஆக 400 வீடுகளைக் கட்டினான்.

சோழ மண்டலத்திலுள்ள அம்பர், அரபுரம், அவனிநாராயண புரம், ஆமாத்தூர், ஆயிரத்தளி, திருவாரூர், திருவிடைமருதில், உத்தமதானிபுரம், திருவையாறு, கஞ்சாற நகரம், கடம்பூர், திருக் கண்டியூர், கருப்பூர், கற்பகதானிபுரம், காராயில், காவிரிப்பூம்பட்டினம், கிள்ளிகுடி, திருக்கொள்ளம்பூதூர், கொற்றமங்கலம், கோட்டூர், சீகண்டபுரம், செல்லூர், திருச்சோற்றுத்துறை, தலையாலங்காடு, தளிச்சாத்தங்குடி, திருத்தெங்கூர், நயதீரபுரம், நல்லூர், நன்னிலம், நாகப்பட்டினம், நியமம், திருநெய்த்தானம், பந்தணைநல்லூர், பராந்தகபுரம், பல்லவ நாராயணபுரம், திருப்பழனம், பழுவூர், பழையாறை, பாச்சில், பாம்புணி, புதூர், புறையாச்சேரி, மண்ணி நகரம், திருமறைக்காடு, மிறையில், வடவாயில், வயலூர், வீரபுரம், திருவெண்காடு, வேளூர், திருவேதிகுடி, ஜநநாதபுரம் முதலான ஊர்களிலுள்ள தளிச்சேரிகளிலிருந்து நானூறு தளிப்பெண்டுகளைக் கொண்டுவந்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீடாக, மேற்குறித்த நானூறு வீடுகளிலும் குடியேற்றினான். அவர்கள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வேலி நிலத்தைப் பங்கு செய்து, அப்பங்கு வழி ஒவ்வொரு வேலி நிலத்துக்கு வரக்கூடிய நூறுகல நெல்லை இராசகேசரியோடு ஒக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அவரவர்களுக்கு அளந்துவிடும்படி ஏற்பாடுகளைச் செய்திருந்தான். இவர்களைக் குடியேற்றினது, முதலிற் குறித்தபடி கோயிற் பணிகளைப் புரிவதற் கேயாம். இந்த நானூறு தளிப்பெண்டுகளில் பெரும்பாலோர் அந் தந்த ஊர்களிலுள்ள திருக்கோயில்களில் தொண்டாற்றி வந்தவர் களேயாவர். இங்ஙனம் குடியேற்றப்பட்டவர்களில் சிலர் அரபுரத் துத்தாழி விண்ணகரம், தஞ்சாவூர்த் தஞ்சை மாமணிக் கோயில், அம்பர் அவனி நாராயண விண்ணகர், பாம்புணி ஸ்ரீ பூதி விண்ணகர் என்னும் திருமால் திருக்கோயில்களில் பணிகள் புரிந்தோர் ஆவர்.

முதலில் இங்குக் குடியேற்றப்பட்டவர்கள் திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத்தில் பணிகள் ஆற்றிவந்த நக்கன் சேர

மங்கை, நக்கன் இரணமுகராமி, நக்கன் உதாரம், நக்கன் பட்டாலி, நக்கன் எடுத்த பாதம், நக்கன் சோழகுல சுந்தரி, நக்கன் ஏகவீரி என்னும் எழுவர் ஆவர். நக்கன் என்பது தளிச்சேரிப் பெண்டுகளுக்கு அவர்கள் திறமை குறித்து இராசராசனால் கொடுக்கப்பெற்ற சிறப்புப் பெயராகும். இங்ஙனமே ஏனைய முந்நூற்றுத் தொண்ணூற்று மூவர் பெயர்களின் முன்பு தனித்தனி இந்த நக்கன் என்னும் சிறப்புப் பெயர் கொடுக்கப்பெற்றுள்ளது.

முதலாம் இராசராசன் திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத்துத் தளிச்சேரிப் பெண்டுகளில் சிலரைக்கொண்டுபோய் முதன் முதல் குடியேற்றியதற்குக் காரணம்:— அந்த ஒலோகமாதேவீச்சரம் அவனது முதற் பெருந்தேவியாராகிய ஒலோகமாதேவியாரால் கட்டப்பெற்றது ஆதலால், அதிலிருந்து கொண்டுபோய்க் குடியேற்றுவது அத்தேவியார்க்கு உவப்பை உண்டாக்கும் என்னும் எண்ணம்பற்றியதாகலாம். அல்லது திருவையாற்றுத் திருப்பதிகத்தில் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியுள்ள

"வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே"

என்னும் தேவார அடிகள், சிறந்த சிவபத்திச் செல்வனாகிய அவன் திருவுள்ளத்தில் பதிந்திருந்ததன் விளைவாய்த் திருவையாற்றுத் தளிச்சேரிப் பெண்டுகள் பண்டுதொட்டே நடனக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று அவன் கருதியது ஆகலாம்.

இங்ஙனம் முதலாம் இராசராச சோழன் தளிச்சேரிப் பெண்டுகளைக் குடியேற்றி அவர்களுக்கு நிவந்தம் அளித்ததோடு அமையாது அவர்களின் தொண்டுகளைக் கண்காணிக்க ஒருவரையும் நியமித்து அவர்க்கும் நிவந்தம் அளித்துள்ளான். இச்செய்தி "தளிச்சேரிப் பெண்டுகளுக்கும், காந்தர்விகளுக்கும் நாயகஞ்செய்ய சாவூர் பரஞ்சோதிக்குப் பங்கு இரண்டு" என்னும் கல்வெட்டுப் பகுதி அறிவிக்கின்றது.

தளிச்சேரிப் பெண்டுகளுக்கு அளித்த நிவந்தங்களை உணர்த்தும் கல்வெட்டின் முற்பகுதியால், சோழமண்டலத்து ஊர்க்ளில், வழக்கில் அதிகமாகப் பயிலப்பெறாத சில கோயில்கள் புலப்படுகின்றன. அவைகள் **அம்பரில்** முதுபகவர் தளி; **அரபுரத்தில்** நிகளங்க

ஈஸ்வரம்; **ஆயிரத்தளியில்** மல்லீஸ்வரம்; **கடம்பூரில்** இட்டாச்சி ஈஸ்வரம், நந்தீஸ்வரம்; **கோட்டூரில்** குணவதி ஈஸ்வரம், பஞ்சவன்மாதேவீஸ்வரம்; **தஞ்சாவூரில்** எரியூர் நாட்டுத்தளி, ஜயபீம தளி, பிரமகுட்டம்; **திருவாரூரில்** அருமொழி ஈஸ்வரம், உலகீஸ்வரம், பிரஹமீஸ்வரம், மட்டைதென்தளி; **நியமத்தில்** அரிகுலகேஸரி ஈஸ்வரம், சந்திரமல்லி ஈஸ்வரம், நிருபகேசரி ஈஸ்வரம்; **நன்னிலத்தில்** அமலீஸ்வாம், திருமேற்றளி; **நாகப்பட்டினத்தில்** நடுவில்தளி; **பழூரில்** பகைவிடைஈஸ்வரம்; **பழையாறையில்** அரையெருமான்தளி, சங்கீஸ்வரம்; **பாச்சிலில்** திருமேற்றளி, திருவமலீஸ்வரம்; **பாம்புணியில்** திருப்பாதாளஈஸ்வரம், **விடைய புரத்தில்** திருப்புகழீஸ்வரம் முதலான கோயில்களாம்.

## சரித்திரத்துக்குப் பயன்படும் சில செய்திகள் :—

1. திருக்காரோணத்து நக்கன் ராசகேசரிக்குப் பங்கு ஒன்றும் (Para 10)

2. முப்பத்தேழாம் வீடு தஞ்சாவூர் எரியூர் நாட்டுத்தளி நக்கன் மாதேவடிகளுக்குப் பங்கு ஒன்றும் (Para 131)

3. இருபத்தொன்பதாம் வீடு இத்தளி நக்கன் குந்தவைக்குப் பங்கு ஒன்றும் (Para 215)

4. ஐம்பதாம் வீடு இத்தளி நக்கன் அருமொழிக்குப் பங்கு ஒன்றும் (Para 236) என்னும் தொடர்களில் **இராசகேசரி, மாதேவடிகள், குந்தவை,** அருமொழி என்னும் பெயர்கள் வந்துள்ளன. இவைகளில் இராசகேசரி என்பது முதலாம் இராசராசனுடைய பட்டப்பெயர். மாதேவடிகள் என்பது முதலாம் இராசராச சோழனின் மகளாரின் பெயர். குந்தவை என்பது இராசராசனுடைய அரும்பெறல் தமக்கையாரின் பெயர். அருமொழி என்பது முதலாம் இராசராச சோழனுடைய மற்றொரு மகளாரின் பெயர். "அருமொழி சந்திர மல்லியரான கங்கமா தேவியார்" என்னும் திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத்துக் கல்வெட்டுப் பகுதியே இதற்குச் சான்றாகும்.

இங்ஙனம் அரச குடும்பத்தார்களின் திருப்பெயர்களைத் தளிச்சேரிப் பெண்டுகளுக்கு வைத்து வழங்கப்பெற்றமையால், இத்தளிச்சேரிப் பெண்டுகளின் பெற்றோர்கள் அரச குடும்பத்தில் அளவிறந்த இராச பக்தி உடையவர்களாய்த் திகழ்ந்திருந்தனர் என்று கொள்ளலாம்.

(தொடரும்)

128-ம் பக்கத் தொடர்ச்சி.

## தாய்மை.

"ஒப்புரவு"

9. "செல்லத்தைக் கண்ணாலே காணவில்லை,
சிறுக்கியிவள் மறைவாகச் செய்துவிட்டாள்;
வெல்லத்தை விழுங்குதல்போல் விழுங்காவிட்டால்
வில்லாயி நானல்ல, வீட்டிற்போய்நான்
எல்லாரை யுந்திரட்டி வருவேனென்றாள்.
என்செய்வேன், "எல்லோரும் பொறுங்க"ளென்றேன்.
புல்லாக்கு வீழ்ந்ததெனப் புலம்பிக்கொண்டே
பொன்னிவரப் பூசல்நின்று போச்சுதம்மா.

10. கண்ணுக்கே விருந்தாகிக் கனிவாய்ப்பேசுங்
கான்மயிலோ, மடமானே, கமழ்பூங்கொம்போ,
மண்ணுக்கே மணமூட்டு மருவோ, நொந்த
மனத்திற்கே பூசிடுநன் மருந்தோவென்னும்
பெண்ணுக்கே முளைக்கையிலே பிறக்குமெல்லாப்
பேறுகளு மாய்ந்தாரே பெருமைகண்டார்.
விண்ணுக்கே யாடிவைத்துக் காணுவோரே,
மெல்லியலா ருள்ளத்து விசையைக்காண்போம்.

## முதிர்ச்சியிலே பெண்.

11. இம்மென்றாற் கண்களினீர் அருவிபாய்ச்சும்,
இசைத்திட்டாற் கன்மனமு மிழுதாய்மாற்றும்,
சும்மாக விருந்திட்டாற் கனலைவெல்லும்,
சொல்லெடுத்துத் தொடுத்திட்டால் வெறிசாய்நிற்கும்
தம்மைத்தாம் பிறர்விழையப் புனைவுசெய்யும்,
தம்மின்நல மிக்காரைத் தளர்ந்துநோக்கும்,
வெம்மைக்கே யிடனான கள்வரேனும்
விதிர்த்துமல ரடிவீழ விருப்புவீசும்,

12. தாயாகிப் பால்சுரந்து மகவளர்த்துத்
தண்மையினும் பொறுமையினும் தழைத்துநிற்கும்,
வாயாலே வம்புதும்பு வளர்க்கும், பின்னால்
வருநிலையை எண்ணாமல் வழுக்கிமாயும்,
காயாகிக் கனியாகிக் குலுங்கும்போது
கண்ணெறிக்குக் காம்புதரும், காத்தலென்னும்
சாயாத நெறிநின்றால் உலகமெல்லாம்
தாழ்ந்தடியில் வீழ்ந்திருக்குந் தகவுகொள்ளும்.

13. மென்மலரா, கொடுங்கனலா, கல்லா, எஃகா
வெவ்வேறு பருவத்தும் விளங்குமுள்ளம்;
சொன்மலரால் தெய்வமென வேத்துவேனு?
தொடரிடுக்கண் யாவினுக்குந் தோற்றமென்றே
வன்மொழியால் வைவேனு பெண்மைதன்னை?
வழிவழியா யதனியல்பை வைத்து நூல்கள்
பண்ணியவர் புலமைநலம் பட்டபாட்டைப்
பார்த்தவனு எளிதாகப் பாடிவைப்பேன்.

14. கண்ணகியைத் தனிவைத்து, நடக்கவிட்டுக்
காவலன்முன் வழக்குரைக்க, மதுரை தீய்க்கப்
பண்ணிவிட்டுச், சேரனையுந் தானைகொண்டு
படரவிட்டுப் பார்த்தவொரு பாட்டுக்காரன்
எண்ணமெலாம் பெண்மையிலே சுழன்றசெய்தி
இருக்கட்டும்; பாஞ்சாலி, சீதைஎன்ற
பெண்ணிருவர் பொருட்டன்றே வடவர்செய்த
பெருங்கதைகள்; இலக்கியங்கள் பிறவுமற்றே.

15. பூப்பெய்தி, மணமுடித்து, மக்கள்தந்து,
புகுந்தவிடத் தேகுடும்பப் பொறுப்பையேற்றுக்,
தோப்பாகச் செல்வமெலாங் கண்டு, கொண்கண்
கொள்கைதனக் கேகுறுக்கே நில்லாளாகித்,
தோப்பாக நிறைந்தவொக்கல் சூழவாழ்ந்து,
சோர்வின்றி மகவளர்த்துக் கல்விதந்து,
காப்பாக நிறைகொண்டு, வாழ்வுமுற்றிக்
கனிந்தாளோர் பெண்ணென்றூற் கடவுளன்றே.

16. அடிக்கொருகால் முள்தைத்தாற் போலேபெண்ணின்
அகவைசெலும் வழியெல்லாம் இடுக்கணன்றே,
குடிக்கொருநல் விளக்காவாள் மாறிநின்றல்
குடைசாய்ந்த வண்டியெனக் குடும்பம்வீழும்;
நொடிக்காமற் கொண்டுசெலு மனையின்மிக்க
நுகர்விடமு முண்டோ?விவ் வுலகில் வாழ்வு
பிடிக்காமற் றுறந்தோரும் பெண்ணுலன்றே?
பெண்ணலத்தின் வீறனைத்தும் பேசுவோமே.

17. "மாமலரோ, மாந்தளிரோ மங்கைமேனி;
வாரிதியோ, வான்வெளியோ மங்கையுள்ளம்;
தேமொழியிற் றேனென்றே நஞ்சு"மென்று
சிந்தனையில் வந்தவெலாஞ் செப்பிப்போனர்.
நாமலரு மாறெல்லாம் பாடிவைத்தால்
நல்லனவு மல்லனவும் பல்கிப்பின்னிப்
பாமலருஞ் சொற்குவிய லாகிவேண்டும்
பண்பிகந்து களைகொழுத்த பயிரைமானும்.

## மென்மை.

18. மென்மையதாம் பெண்மைநலம் பூவின்தோடோ,
வியன்றம்ப லப்பூச்சி மேலோ,நத்தை
உண்ணிகழ்மென் றசையோவென் றுரைக்கும்வண்ணம்
உள்ள,ததன் சிறப்பெல்லாங் காப்பிலன்றோ?
கண்ணிறையு மழகோங்க நடக்குமென்மை
கண்டதனைப் போற்றுதலே கடமையாகும்;
திண்ணியதாய்ப் போமாறு விடுதலாகுஞ்
செயற்கையிலே இயற்கைநிலை சிதறிப்போகும்.

19. தொட்டிட்டாற் சுருங்குகின்ற பூண்டையொப்பச்
சொல்லுக்கே சுருங்குமுகம், சொரியுங்கண்ணீர்;
மட்டிட்ட வாய்மொழியுந் துயரங்காட்டும்,
வானிடிந்து வீழ்ந்ததென மயங்கிவீழும்;
கொட்டிட்டா லள்ளுவதற் காகாதன்றோ,
குலக்கொடியார் மென்மையினைக் குலைக்கவேண்டா;
வெட்டுண்ட மென்மையினால் வணிகப்பெண்ணும்
வேகவைத்தாள் மதுரையினை வேந்தற்சாய்த்தே.

20. பெண்ணினது மென்மையினைப் போற்றநாடு
பெருந்துயரக் கடல்குளிக்கும்; பொதுமைஎன்றே
கண்ணினொடு காய்பொருத்திக் காட்டல்போலே
கன்னியர்தம் கைகளிற்போர்க் கருவிதந்தார்;
மண்ணதிர வானதிரச் செய்யும்பெண்ணின்
மனநிறையை வளர்க்கின்ற மென்மைகண்டீர்,
முண்ணிறைந்த கள்ளியினைக் காவல்செய்ய
முல்லையினை வேலிவைக்கும் முறைமையுண்டோ?

21. மேனியிலே மென்மை,நடை மென்மைசொல்லில்
மென்மை,புரி செயலெல்லாம் மென்மையிந்த
நானிலத்தி லுயிர்க்குலங்க ளெல்லாங்காண்மின்
நன்றாகப் புரியுமிந்த மென்மைச்செய்தி;
ஆனிறுத்தி யேறுவைத்துக் காண்மினின்னும்
அரியேற்றைப் பெண்சீயத் தமைப்பைக்காண்மின்;
தேனிருக்கும் மொழிக்குயில்,மென் பூவை,கோழி,
செம்போத்துக் குழுவிலெலாம் பெண்மைவேறே.

22. தற்காப்புப் போர்க்கருவி தம்மாலாமோ?
தாய்க்குலத்தைக் காக்ககிலாச் சழக்கர்கூட்டம்
நற்காப்புக் காமரசு கோலுமோதான்?
நாகரிக மென்றுபல நவிலுவோரே,
சொற்காக்குந் திறனில்லா வரசர்முன்பு
துருக்கியர்முன் சிதறுண்டு மென்மையாலே
இற்காத்த பெண்குலத்துக் கிழுக்கந்தந்தார்,
இன்றுமதைப் பாஞ்சால மியம்பக்கேண்மின்.

23. சாத்திரமுங் கோத்திரமுஞ் சாதியோடு
தன்னலமும் பேராசை தானும்நாட்டை
மாத்திரமோ மக்களுடை மனத்தையெல்லாம்
மாருக்கிக் கூருக்கி வகிர்ந்துபோட்டுத்
தீத்திறனை வளர்த்தனவால்; ஒன்றிப்பின்றிச்
சிதறுண்ட பாரதத்தைச் சேர்த்துக்கொண்டோம்;
நாத்திறனே போர்த்திறனே செல்லாதிங்கே,
நல்லுணர்வுத் திறனென்றே பெண்மைகாக்கும்.

24. முப்பத்தா ருங்கோடி மக்கள்தம்மில்
மூன்றிலொரு பங்காகப் போனாலுந்தான்
இப்போது மீராறு கோடியன்றோ
இருக்கின்றார் படையெடுக்கு மாண்களன்னார்
தப்பாமற் பொதுப்பணியிற் சார்வராயின்
தாய்மார்க ளெற்றுக்கோ படையில்வேண்டும்?
எப்போது மில்லிருந்து மகவுகாத்தே
இடுக்கணெலாந் துடைக்கவெவ ரிருப்பதாங்கே?

25. ஆனிமிர்ந்து பாயுதலும், பெட்டைக்கோழி
அலறிவந்து கொத்துவதும் மகவுகாக்க;
தானிருந்த காவலுக்குள் பகைவந்தாக்கால்
தண்மையினைத் தணலாக்கித் தாக்கும்பெண்மை;
வானிருந்து மின்பிறத்தல் போலேமென்மை
வயிற்றிருந்து பிறக்குமந்த வாற்றல்கண்டும்
ஏனவர்க்குப் படைதந்தீர்? நீரேஏந்தும்;
இருவிழிகள் போதாவோ எரியைக்கக்க!

## நாணம்.

26. மென்மையிலே விளைந்தபெரும் பேறுநாணம்
விட்டதிலை நம்நாட்டுப் பெண்ணையின்னும்;
வன்மையிலே பெண்தளர்ந்தா ளென்றால்நாணம்
வற்றியதங் கென்றேதான் வரையவேண்டும்;
தொன்மையிலே நிறைக்கதவந் தொடுத்ததாழாய்ச்
சொன்னதிரு வள்ளுவனார் தோற்றாரில்லை;
நன்மையிலே சிறிதானு மிருப்பதெண்ணி
நாமமைதல் கூடாது, வளர்க்கவேண்டும்.

27. நாணிருக்கும் பெண்முகத்தி லழகுமின்னும்;
நட்டாரை விட்டகலா நலத்தைப்பின்னும்
மானமெனுங் குடிமைக்கோர் வாயிலாகும்;
வளமிதனை யில்லார்கள் வறண்டபாலை;
வாணிகர்த்த கண்ணார்தம் நாணினின்று
வழிவழியாய் வருங்குடிகள் மானங்காக்கும்;
ஆணிகர்த்தோ மெனப்பேசி நாணைவிட்ட
அடங்காத மங்கையர்தம் முகத்தைப்பார்மின்.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

# நவமணித் தேர்ச்சியில் தமிழரது கலையுணர்ச்சி.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கு)

[K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.]

மாணிக்கங்கள் பொதுவாக தாமரை மலரின் இதழ்போல் செந்நிறமாகவும், மிக்க பளபளப்பாயும் காட்சிக் கெழிலுடைய நல்ல நீரோட்டமுடையதாயுமிருத்தல் வேண்டும். சிவந்த ஒளியில், ஒரு பக்கல் பிறிதொரு ஒளி கூடியிருப்பின் அது கேட்டினைப் பயக்கும். அது பழுப்பு நிறம் போன்றும் மின்னல் ஒளியுடனும் இருத்தலாகாது. அத்தகையது அச்சம் தரும். பிளவும் நுரையும் கூடிய மாணிக்கத்தை அணிவதால் தீங்கு நேரும். இயற்கையாய நிறத்துடன், இரு வேறு நிறங்கள் இணைந்திருக்கும் மாணிக்கத்தை அணிபவர் மானபங்கம் அடைவர். தேறலின் துளியும் பாலின் துளியும் பட்டதுபோன்றும், நுரையுடன் கூடியதுமான மாணிக்கக் கற்களை அணியலாகாது. என்னெனில் அதனால் சீரும் செல்வமும் ஆயுளும் குன்றும்.

அஞ்ஞான்றைத் தமிழகத்து மருத்துவ நூல் வல்லார் மாணிக்கக் கற்களை பக்குவப்படுத்தி மருந்து வகைகளில் கலந்து உண்டால் அது உடலுக்கு ஊட்டமும், தெளிவும் தந்து உயிர் வாழ்க்கையை நலனும் பயனுமுடையதாக்கி விளக்கஞ் செய்விக்கிறதென எடுத்துக் காட்டுவர். ஊட்டந் தரும் உய்வுறைகளில் (Vitamins) தெளிவு பயப்பதான உய்வுறைவெயிலவன் ஒளியில் மிகுதியாக நிறைந்திருப்பதென்பது உணர்வாட்சியுடையாரின் கூற்றாகும். தெளிவு பயக்கும் மாணிக்கத்தின்பால் நன்மதிப்பும் கடைப்பிடியும் விளங்கக் கொண்ட நற்றமிழர் வெயிலவனையே மாணிக்கத்திற்குகந்த தெய்வமெனப் போற்றி வந்தனரென்றும் வாய்மை அறிவுக்குப் பொருந்தியிருப்பது மலையிலக்கேயாமென்க.

பளிங்கு வகைகளிலே பிறப்புகொண்டு, குணவேறுபாட்டால் வேறாகி நின்று விளங்கும் நலங்கெழு ஐவேறு மணிகளிலொன்று புருடராகம். இதன் இயல்பினைக் கிளக்குமிடத்து ஆசிரியர் இளங்கோவடிகள் 'பூச உருவின் பொலம் தெளித்தனையவும்' என எடுத்தியம்புவர். இதனான் பூச மீனின் அனைய தாய் பொன்னைமாசறத்தெளிவித்தாலொத்தது புருடராகம் எனப்படுவதாயிற்று. பாட்டிசைக்கும் நல்லிசைப் புலவராகிய இளங்கோ

வடிகளின் கருத்தறிந்து உரை மலர்த்தும் அரும் பதவுரையாசிரியர், 'பூசை யுருவிற் பொலங்தேய்த்தனையவும்' எனப்பாடங் கொண்டு, பூனைக்கண் போன்று பொன்னைத் தேய்த்தாற் போன்றது புருடராகமென்பர். இம்மணியின் இலக்கண வரையறுப்பு சங்ககாலத்து நூல்களில் தெளிவாய் விளங்காமற் போனாலும், பெரும்பற்றப்புலியூர் நம்பியடிகள், புருடராகம், வயிடூரியம் கோமேதகம் என்பனவற்றை மும்மணியென்றே பகர்வார்.

'......உயர்புருட ராகம் செம்பொன்
வண்டகட்டின் தேனொழுகு நிறமே யென்பர்
உரியவயி டூரியம்பொன் மேன்மு லைப்பால்
ஒழுகுமொளி யென்பர்கோ மேத கத்தை
மருவுவயி டூரியத்தின் மீது தூய
மதுத்துளிமே வியதென்பர் வண்ணந் தானே.
முறைமைகெடா விலைதமக்கு நீதியொன்றே
மும்மணியா வனசொன்ன புருட ராக
முறுவயிடூ ரியங்கோமே தகமே யென்றுங்
கோதுவர்மற் றிவற்றின்க ணுதித்த வெண்ணின்
மறுவறுதோ ராவல்லி கனக தோரா
வல்லிமுத லாயினவுண் டென்பர் மற்று
நெறியுரைப்பி னுளபலவிங் கரசர் மாட்டு
நேசமுடை யாருமைப்போற் காண்டி லோமால்'

(திருவாலவாயுடையார் திருவிளையாடல்)

புருடராகக் கற்கள் வெண்ணிறத் தோற்றமுடையன. நல்ல உருவும் உருவத்தி யொத்த ஒளியுமுடையனவாயிருத்தல் வேண்டும். இயற்கையா யுள்ள வெண்ணிறமிலாது தராசமொடு மஞ்சள் பச்சை முதலாய நிறங்கொண்டு, துளை, கோடு, புள்ளி, சரைமலம், சம்படி, மிருத்து, பிளத்தல் ஆகிய இவற்றுடன் கூடியிருக்கும் புருடராகக் கற்களை அணிந்தால், அறிவுகெட்டு தன்னிலை மாறுபடும். அதனுன் மனந் தளர்ந்து நினைவு மாறும். சித்தம் கலக்கமெய்தித் திகைப்பேறும். மனமிளைத்தும் வலிகுலைந்தும் அனுபவ அறிவும் தடைப்பட்டு வருந்தக்கூடும்.

அறிவின் ஆற்றலையும், இயக்கத்தையும், பிறர்க்குணர்த்தி போற்றுதற்கமைந்த புறத்தடையாளம் வெண்ணிற மென்பது தொன்று தொட்ட தமிழ் மரபாய் இன்றும் வழங்கிவருவது

தோற்றம். அறிவிற்கு வெண்ணிறத் தோற்றம் உரித்தாதலை, அறிவின் திருவுருவாய உருத்திரசன்மன் 'வெளியது உடீஇ, வெண் பூச்சூட்டி, வெண் சாந்தணிந்து கன்மாப் பலகை யேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப' என்ற இறைய னாரகப் பொருளுரைக் குறிப்பால் பெறப்படுதல் காண்க. இதனாற்றான் தமிழ் மக்கள் அறிவின் செல்வியாகிய கலைமகளின் திருக்கோலத்தை வெளியது உடுக்கும் வெண் கோலமாகத் தீட்டிக் காட்டுவர். எனவே அறிவைப் பேணுதலுக்குரிய உணர் வாட்சியுடையார்பால் வெண்கோலங்கொண்டு வயங்கும் நன்னர் வழக்கம் இதுகாறும் இயற்கையியல்பாய் வழங்கிவரற்குரிய தாயிருக்கிறது. அறிவு நிலைக்குரிய வெண்கோலம் அதன் இயக்க வினைவாகிய படைப்பின் நிகழ்வுக்கும், சிறிது உள்ளுங்காலை ஒக்குமென்க. இது குறித்தே, அறிவின் செல்வியாகிய நாமகளோடு இனிதே உறையும் அயனைத் தமிழ்மக்கள் படைப்புக் கடவுளென்றழைப்பர். மற்றும் கலைமாதின் தலைவனை 'மறை யோன்'என மெய்ஞ்ஞானப்பொருளில் விளிப்பது தண்டமிழோர் தம் பெருவழக்கென்க. எனவே மறையோன் என்ற சொல் பண்டு முதல் இன்றளவும் தமிழ் வழக்காற்றிலுள்ள அருஞ்சொல் லெனக் கொள்க. மற்றும் அறிவு நிலைச் சிறப்பின் அமைப்பினை எடுத்துக்காட்டவேண்டி வள்ளுவப் பெருந்தகையார் 'அறிவுடை யார் எல்லாமுடையார்' என அழகுற இசைக்கும் நல்லிசைத் தொடரினைக் கொண்டு, தூய வெண்கோலங் காட்டும் புருடராகக் கற்களை அணிபவருக்கு வாழ்க்கையில் நிலவித் திகழும் ஒளி நலமும், அழகும், தெளிவும், வளமும், செல்வப் பொலிவும், வீறும், பல்குமென்பது ஒருவாறு நுனித் துணர்ந்து கொள்ளப் படும். இது பற்றியே, தமிழ்ச் சோதிடக் கலைவல்லாரும், மெய்ப்பொருள் செவியறிவுறுக்கும் குருவினைப் புருடராக வர்க் கத்தின் தெய்வமென்பர்.

வயிடூரியம், குற்றமற்ற வெயிலவன் ஒளியும், தெளிந்த தேனின் துளியின் நிறமுடைய தென்பது, 'தீது அறு கதிர் ஒளித்தெண்மட்டு உருவவும்' என்ற சிலப்பதிகார வரியான் அறியப்படுகின்றது. இதனைக் கோமேதகமென்பர் அரும்பத உரையாசிரியர். 'இரு வேறு உருவவும்' என வழங்கப்படுதலான் இரு வேறு நிறமாகிய மஞ்சளும் சிவப்பும் கலந்தாலொத்தது கோமேதகம் எனப்படும். ஆனல் அரும்பத உரையாசிரியரோ, இருவேறுருவினையுடையது வயிடூரியமென்பர். எனவே சங்க காலத்திலேயே வயிடூரியத்திற்கும் கோமேதகத்திற்கும் பெயர் மாறாட்டமாயிருந்தமை தெளியப்படும். இவைபற்றிய இலக்கண வரையறுப்பு அஞ்ஞான்று தனிப்பட அமைந்திராமையின், அது

பற்றி யாதும் விளக்கமாக உரையாது விடுத்தார் அரும்பத உரையாசிரியர்.

வயிடூரியம், மழைக் காலத்திற்குப் பின்னர், வானத்திலேகும் மேகம் போன்று, ஒருவகை வெண்ணிறமுடையதாய், அல்லது, கடல் நீரை முகந்து புகையன்ன சிறிது மெல்லிய, கருப்பு நிறமும், ஒரு சிறிது வெண்ணிறமும் ஒருங்கு கலந்தாற்போன்று திகழ்ந்து, நல்லொளி வீசுதல் வேண்டும். இயலழகோடு மாணொளி விளக்க முடன் விளங்கும் வயிடூரியங்கள் உயர்ந்தவை எனக் கருதப்படும். இத்தகைய ஒளி விளக்க நீரோட்ட வகை வயிடூரியங்களின் வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலும் காணப்படும். இவ்வா றன்ன வயிடூரியங்களை அணிபவர் அருளொளியராய் மிளிரா நின்று விளங்குவர். மங்கலாய் நல்ல நிறமின்றியிருக்கும் வயிடூரியங்களையும் சிவந்த நிறமுடைய வயிடூரிய வகைகளையும் அணியலாகாது. மற்றும் சொர சொரப்புங்கூடி கனமில்லாத வயிடூரியங்களை அணிவதால் பெருங்கேடுண்டென்பர். இத்தகைய மணிகளை செவ்விதாய்த் தேறிச் சிறந்த முற்காலத் தமிழ்ச் சான்றோர் வயிடூரியத்திற்கேற்ற தெய்வம் கேது என்பது அன்னவரால் தொடர்ந்து நுவலப்படும் நல்லுரைகளானும் விளங் குகின்றதென்க.

கோமேதகத்தின் இலக்கணம் மஞ்சளும் சிவப்பும் கலந்தா லொத்த நிறத்தையுடையதாயிருத்தல் வேண்டுமென்பது ஆசிரியர் இளங்கோவடிகளது கருத்து. என்றாலும் தமிழகத்தின் இயல்பான நவமணிச் செழுமையினை நன்கு பயன்கண்டு கொண் டவர், ஒளிவிடா நின்ற நன்மையொடு பொருந்திய மட்டு நிறமா யிருக்கும் மணியினையே கோமேதகமென்பர். சுருங்கக்கூறின் அஃது தேனின் தேறலை யொத்து மெல்லிய செம்பொன்னிறம் விராஅய் மெருகுடையதாயிருத்தல் வேண்டும். இத்தகைய நகு மணிகள், மிக்கதோர் நிறையுடையனவாய் வழவழப்பாக உயிர்ப் புடன் ஓங்கி நிற்றல் நலம். புடலம் பூபோன்ற உருவமுடைய தாய் சுருட்டிக்கொண்டு பிளவு, பிந்து, புள்ளடி, கோடு முதலிய குற்றங்களையுடைய கோமேதகமணிகளை அணியலாகாது. என் னெனில் அவை விளியாது நிற்கும் பழியினை எளிதில் தரும் பான்மையன. ஏதுங் காரணமின்றிப் பலர் கூறும் பழிமொழி நாளும் வளர்ந்து அணிபவரை நலியச்செய்யும். புவியில் வாழும் பழியா லெழுந்த பழிமொழி முதற்கண் அம்பல் நிலையாய் அமைந்து மறைவாயிருந்து பின் அயலறிய அலரும். பின் இடும்பைப்பெருக்குங் கொடும்பழியாய் மாறித் தூற்றலும் நிகழும். இவ்வமையத்தின்கண் குற்றமற்ற கோமேதக மணியினை அணி

பவருக்கு அலர் அருள்போன்று மிளிர, அன்னவர் அறநெறிச் சாயல் கொண்டு விளங்குவார். அலர் பறையறைந்ததுபோன்று எங்கும் பரந்து நிற்குமாதலால் அதனை மறைக்கமுடியாதென்க.

'அலரே
மறைத்தல் ஒல்லுமோ? மகிழ்ந!
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்ற தொளியே!'

என்பது ஐங்குறுநூறு.

* * அலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

என்பதூஉம் வள்ளுவர் வாய்மொழி.

ஞாயிறையும், திங்களையும் இராகு கேது எனும் பாம்புகள் மறைத்து இடரிழைக்குமென்பது தமிழ்ப் புராணக் கோட்பாடு.

அங்கண் மதியம் அரவின் வாய்ப்பட்டெனப்
பூசல் வாயாப் புலம்பு மனைக் கலங்கி
ஏதின் மக்களும் நோவர்; தோழி!
ஒன்றும் நோவார் இல்லைத்
தெண்கடற் சேர்ப்பன் உண்ட என் நலக்கே'

என்பதும் ஈண்டு ஊன்றி யுணரத்தக்கது. கோமேதகமணி பழி நீக்கிப் பெருவாழ்வளித்து வளர்க்கும் கருணைத் தாயாய் கருதப் படுவதினுன், அதற்குத் தகவாயிருக்கும் தெய்வம் இராகு எனத் தமிழ்மக்கள் கொண்டிருக்கும் வழக்கின் கவினைக் கண்டு கொள்க. தெய்வத்திற்கேற்ற பண்புகளை மணிகளை அணிவதாலுண்டாகும் பண்புகள்பாலேற்றிப் பொருந்த வைக்கும் பழந் தமிழரின் இனிமைப்பாடு பெருந்தமிழரனைவர்க்கும் பயன் தருதல் நன்கு விளங்காநிற்கும்.

குற்றங்கள் நீங்கிய நலனுடைய கோமேதகமணிகளை அணிவதால் வலிமையும் புகழும் பெருகும். பிணியும், பழிப்பும், பழிப்பிற் கேதுவாகிய பாவமுமின்று. பாவமின்றெனின் பாவத்தின் பயனாய நிரயமுமில்லையென்க. மற்றும் சந்ததி விருத்தியைக் கெடுக்கும் பழியுமில்லையாம். எனவே மாசற்ற கோமேதக மணிகளை அணிபவருக்கும் அவர் சந்ததிக்கும் செல்வங் குறைபடாதிருக்குமென்றும், பழியும் வந்து சூழாதென்பதும் தெளிவு.

நலங்கெழு மணிவகைகளில் தனிப்பட்ட முறையில் காட்டப் படும் நீலமாமணி, மாணிக்கவருக்கத்திலொன்றாய நீலகந்திக்கு வேறாயது. இதனியல்பினை,

'நீலத்தியல்பு நிறுக்குங்காலை,
நால்வகை வருணமும் நண்ணுமா கரமும்
குணம்பதி னென்றும் குறையிரு நான்கும்
அணிவோர் செயலு மறிந்திசி னோரே'

* * *

'வெள்ளை சிவப்புப் பச்சை கருமையென்
றெண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே'

எனப் பண்டைத்தமிழ்ச் சூத்திரமும் நெறியுற வகுத்தோதுவ தாயிற்று. நீலமணிக்குச் சாதி நான்கென்றாலும், பொதுவாக நோக்கின் அது இருவகைத்து. அவை இந்திர நீலம், கதிர்நீலம் என்பன. கதிர் நீலம் கனமில்லாததாயிருக்கும். இதனில் நீலவொளி அலையலையாக அசைந்து தோன்றக்கூடிய நீரோட்டத்து நளினமும் அழகும் விரவியதாயிருக்கும். நல்ல கன முடைய நீலம் இந்திர நீலமெனக. நீலவொளி அம்மணியில் கொழுமைமேவிச் செழித்திருக்கும். இது கதிர் நீலத்தைவிட பெருவிலை யுடையதாயினும், கிடைப்பது மிக அரிது. புள்ளி, பிந்து, பிளவு முதலிய குற்றங்களிலாத நீலமணிகளை அணிபவர் பால், இளக்கம், மென்மை, விரவல், பிரிவறல் முதலிய நேர்மைப் பண்புகள் மாண்புறும். அன்னவர் செல்வ நுகர்ச்சிக்கண்ணின்று தலைசிறந்து திளைத்து, சிறந்தது பழகும் தெளிவுகொண்டு மேன்மேல் வீறுடையராய் விளங்கி நிற்பர். குற்றங்கள் மலிந்த நீலமணிகளை யணிபவர் உயர்விழந்து இகழப்படுவர். நெஞ்சிற் சிறவாது வஞ்சித்து வாழும் நடைப் பிழையால் தாமே தமக்குத் துன்பம் ஈட்டிக்கொண்டு துயருறுவர்.

இருள் தெளியவைத்தாலனைய நீலமணியின் மாட்சியை செவ்வனே பல்லாற்றலுடன் ஆராய்ந்தறிந்த சோதிடத்தமிழர் இதற்குரிய தெய்வம் சனியென (பொங்குசனி, மங்குசனி) இயை புடன் புகன்றிருத்தல் மதிநலனுடையா ரெவர்க்கும் உள்ளுந் தோறும் இறும்பூதும் ஆராமையும் பயக்குமென்பது ஒருதலை. இறைவனது திருவருட்சக்தி நீலநிறமென்பர் தமிழறிஞர். 'நீலமாமணி கண்டத்தர்' என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்ததும் காண்க. இதன்கண் இறைவன் தேவர்களைக் காக்கத் திருவுளங்கொண்டு பௌவ நஞ்சமுண்டு தமது கண்டத்தில் நிறுத்திய குறிப்பு ஈண்டெண்ணத் தக்கது. பேரின்பப்பேற்றை மன்னுயிர்க்கு அளித்தற்குச் சாதகமாக இறைவனது அருட்

சக்தியால் தொழிற்படுத்தப்படும் தனுகரண புவன போகங்கள் தோன்றி ஒடுங்குவதற்குள்ள இடத்தை நீலமெனக்கொண்டார் அறங்காத்து ஞானமெய்ப்பொருளாகிய விழுமிய நிலையினையும் தேவத்தன்மையும் வேட்கும் தவத்தமிழ்ச் சான்றோர். இறைவர் தழலுருவாய் புரமெரி மடுத்த காலையில் நீலநிறமுடைய திருமால் இடபமாய்த் தாங்கி இறைவரது அருட்கோலத்தைப் புலப் படுத்தும் 'தடமதில்கள் (திரிபுரங்கள்) அவை மூன்றும் தழல் எரித்த அந்நாளில், இடபமதாய்த் தாங்கினன் திருமால்காண் சாழலோ' என்ற திருவாதவூரடிகள் திருவாக்கு, உலகவியற்கை யில், இறையருள் விளக்கங்கொண்டு நிகழ்வனவற்றை ஒரோவழி தத்துவார்த்தமாய்த் திரளப்புனைந்து கவின்செய்த வகையினை யோர்க. எனவே, உலகியல் வழக்கினை உயிர்நிலையாகக்கொண்டு நீலத்தின் ஒட்பத்தினை நனித்துணர்ந்து காரணமும் பயனும் கருதி கண்ணோட்டமுடன் வாழலே தமிழருள்ளமென்பது பெறப்படும்.

பேறுதங்கிய வீடுறுது வந்து வந்து பிறந்திறந்திடும் மன்னுயிர்களின் இளைப்பை நீக்குவதும், முத்திப்பேற்றை நல்கு வதும், நலமுடைய நீலத்திற்குண்டெனா நீலமணிகளை நெடிது மெய்ப்படுப்போருணர்வர். அன்னார் சிவவொடுக்கமுற்று இயல்பாகவே சிவஞானம் பெறுவர். மொழிப்பொருட் காரணம் விரித்து விளக்குவதில் வல்லராய தமிழர் சனி என்ற சொல்லில் பிறத்தலுமென்ற பொருளும் ஒடுங்குதலுமென்ற பொருளும் உளதெனக் கூறுவர். இதுகொண்டே சோதிட அறிவானுன்ற தமிழ்ப்பெருமக்கள் பலரும் பிறப்பிலே இறப்பின் முளையும், இறப்பிலே பிறப்பின் முளையுமிருப்பதை நன்கோர்ந்து சனியை ஆயுள் காரகனாகக் கொள்வர். எனவே எந்த இடத்தில் யாவும் ஒடுங்குகின்றனவோ, எந்த இடத்தில் அனைத்தும் பிறக்கின்றனவோ அந்த இடத்தினையே தண்டமிழர் சனி அல்லது கந்தழி என அழைத்தனர். கந்து+அழி என்பது அணுத்திரள் யாவும் ஒன்று கூடவும் பிரியவுமுள்ள இடமென்க. உயிர்கள் தங்கும் தூண் 'கந்து' எனப்படும். அத்தூணினின்றும் உயிர்கள் பிரிவெய்தும் அவசரத்தைக் குறிப்பது 'அழி'யாகும். இதுபற்றியே ஆளுடைய அரசு இறைவனை 'மழபாடி வயிரத்தூணே' என்ற சொற்றொடரான் மொழிப்பியல் கண்டறிந்து விளித்தமை கருத் திருத்தல் வேண்டும். இதனையே மணிவாசகர்

'துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதி'

என இறைவனை மொழிந்தேத்துவாராயினர். கந்தழியை இலிங்கமென வழங்குவது வேறு நாட்டவரது வழக்காகும். எனவே சனி, கந்தழி என்பன ஒரு பொருட்கிளவிகள்.

வான நூல் வல்லார் சனி அண்டத்தைப்பற்றிச் சாற்றுங்கால் அது ஒளியுடைய இரு விருத்தங்களையும், கரிய ஒரு விருத்தத்தையும் கொண்டு கந்தழி உருவமாயிருக்குமென்பர். சனி அண்டத்தின்மேலே செம்பொற்சோதியுடைய நின்மல சிவம், ஆருயிர் கூட்டங்களாகிய கணங்களுக்குப் பதியாயிருப்பதால், அவ்விமலன் கணபதியென்க. சிவமாகிய பதியின் ஒளிவிருத்தமே விரிசடைபோன்று விளங்கும் அமுத அருட் கதிர்கள். இவை ஆருயிர்கள்பால் இனிமைபயக்கப் படரும் பொருட்டு குவிந்தகாலை, பதி சுந்தர கணபதியாய் விளங்கும். இப்பதியொளியை அடுத்திருப்பது அணுக்கூட்டமும் ஆருயிர்களின் கூட்டமேயாதலின் சனி அண்டத்தின் அடித்தலம் இருண்டிருப்பதியற்கையாம். இதனைக் குறிக்கவே, சனி பகவானுக்கு அண்டங்காக்கையை அவரது ஊர்தியாகக்கொண்டு அதற்கு நேராய ஆகத்தினுடையை அக்கடவுளுக்குப் போர்த்துடுத்தும் வழக்கத்தையும் மேற்கொண்டனர். இதனான் பழந்தமிழ் மக்களது மனனுணர்வின் சீர்மை நண்ணுணர்ந்து தெளிந்துகொள்ளலாகும். சனி அண்டத்தின் அதோமுகம் அதாவது கீழ்நோக்கிய முகம், ஆருயிர்களின் கூட்டமும் அண்டங்களும் சராசரங்களும், திருநீறான விபூதியும் தங்கியிருக்கும் காட்சியினையளிப்பதாகும். இத்தகைய திருக்காட்சியிற்றிளைத்த ஆளுடைய அடிகள் 'வெளியாய் கரியாய்' [நீத்தல் விண்ணப்பம்-31] என இறைவனது பெருமாட்சியினையும், அருள் விளக்கத்தினையும் இதயம் நெகிழ நினைந்து அழகுற இசைப்பாராயினர். இத்தகைய அரிதுணர் பொருளினை,

'ஆமே பிரான் முகமைந்தொடும் ஆருயிர்
ஆமே பிரானுக் கதோமுகமும் ஆறுள
தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கு
நாமே பிரானுக்கு நரரியல் பாமே'

'அண்டமொ டெண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டங் கறுத்த கருத் தறிவாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடையோற்கே'

என்ற திருமந்திர திருவாக்குகள் எளிதுணர் பொருளாய் வெளிப்படுத்திய பான்மை பெரிதும் இன்பம் பயப்பதாகும். இதனில் படிந்த நம் அடிமனம் நீலமணிக்குரிய தெய்வம், சனி(சனி, கந்தழி, கணபதி என்பன யாவும் ஒரு பொருட் கிளவிகள்)யென அறிந்து, உண்மையியல் வழாது காரணங்கண்டு அறிவு நலத்தோடு நாட்டிய தமிழ்ப் புலமைச் சான்றோரது தத்துவார்த்தம் கூறும் முயற்சியில் ஈடுபட்டு வாழ்வில் ஆறுதலெய்துமென்பது தெளிவு.